AUGUST 07, 2020
FRIDAY
VOL: 006/067
RS. 10.00
LATE CITY ★

Find us on facebook/tamilmirror
Follow us on tamilmirror
epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk



# ரணில் தோல்வி

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, இம்முறை தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். கொழும்பு மாவட்டத்தில் யானைச் சின்னத்தில் போட்டியிட்டாலும் ஓர் ஆசனத்தையும் வெல்லவில்லை.

1977ஆம் ஆண்டு, பியகம தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி முதன்முறையாக



தொடர்ச்சி P2

# 2/3ஐ அண்மித்து மலர்ந்தது மொட்டு

புதிய நாடாளுமன்றத்துக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக, நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, மூன்றிலிரண்டு பெரும்பான்மையை அண்மித்துள்ளது.

நேற்றிரவு 11 மணிவரையிலும் வெளியான பெறுபேறுகளின் அடிப்படையிலேயே மூன்றிலிரண்டு பெரும்பான்மையைத் தாமரை மொட்டு அண்மித்திருந்தது.

நேற்று (06) காலை 8 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு, பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டன.

இறுதியாக, இந்தச் செய்தி அச்சுக்குப் போகும் வரையிலும் 90 தொகுதிகளுக்கான பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டன. அதில், 87 தொகுதிகளில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வெற்றியீட்டியிருந்தது.

தொடர்ச்சி P2



## உள்ளே...

2020 பொதுத் தேர்தல் பெறுபேறுகளில், நேற்று (06) இரவு. மணி வரையிலும் வெளியான பெறுபேறுகள் தொடர்பிலான விவரம் 8ஆம் பக்கத்தில் உள்ளது.

# சுனில் தோல்வி



ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி, இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை.

ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அவர், தேசிய மக்கள் சக்தியின் ஊடாக, மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டார்.

இறுதிப் பெறுபேறுகளின் பிரகாரம், மாத்தறை மாவட்டத்துக்கான பெறுபேறு, முதலாவதாக வெளியானது. அந்த மாவட்டத்திலிருந்து 7 பேர், இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவாகவேண்டும்.

தொடர்ச்சி P2

# விருப்பு வாக்கை எண்ணுவதற்கு ரஞ்சித் எதிர்ப்பு

ஐக்கிய தேசிய கட்சி, கொழும்பு மாவட்டத்தில் 5 சதவீதத்துக்கும் குறைந்த சதவீதமான வாக்குகளையே எடுத்துள்ளன. எனினும், அக்கட்சியின் சட்டத்தரணிகள், ரணில் விக்கிரமசிங்கவின் விருப்பு வாக்குகளை எண்ணுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள் என, ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இதுதொடர்பில் அறிக்கையொன்றை விடுத்துள்ள அவர், அக்கட்சி 5 சதவீதமான வாக்குகளையும் பெறவில்லை எனக் குற்றஞ்சாட்டினார்.

இந்நிலையில்,



தொடர்ச்சி P2

## வடக்கில் வீடு; தெற்கில் மொட்டு

# பழைய கட்சிக்கு படுதோல்வி

### சுதந்திர கட்சிக்கு யாழில் வெற்றி

2020 பொதுத் தேர்தல் வாக்களிப்பில், நேற்று (06) மாலை 5.30 மணிவரையிலும் வெளியான பெறுபேறுகளின் பிரகாரம், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி, முன்னணியில் நிற்கிறது.

தொடர்ச்சி P2



# ‘புது முகங்களுடன் சாமர்த்திய அமைச்சரவை’

இலஞ்சம் மற்றும் ஊழல் இல்லாத நாட்டை, அபிவிருத்தியின் இலக்கை நோக்கி நகர்த்துவதற்கு, நாடாளுமன்றத்தில் புதிதாகத் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின், திறமைமிக்கவர்களை இணைத்து, சாமர்த்தியமான அமைச்சரவையை நியமிப்பேன் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த ஒருமாதத்தில், இலங்கை முழுவதும் சுற்றியமையால் மக்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளைக் கண்டறிந்துகொண்டேன் என்றார்.



தொடர்ச்சி P2

# குருநாகல் மேயரை கைதுசெய்ய ஆலோசனை

தொல்பொருள் மதிப்புடன் கூடிய, கட்டடத்துக்கு சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், குருநாகல் மேயர், மாநகர ஆணையாளர் மற்றும் இன்னும் மூவரைக் கைது செய்யுமாறு, சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, பதில் பொலிஸ் மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்றையதினமே இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளாரென, சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரியான அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## வாக்கெண்ண முன்...

பொதுத் தேர்தலுக்கான வாக்கெண்ணும் பணிகள் நேற்று (06) காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட நிலையில், வாக்கெண்ணும் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகள், விசேட பரிசோனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.
(படப்பிடிப்பு: குஷான் பதிராஜ)



# சுழன்றடித்தது காற்று: மரங்கள் முறிந்தன; மின்சாரம் தடைப்பட்டது

### போக்குவரத்து பாதிப்பு; அகற்றும் பணிகள் துரிதம்

■ என் ஜெயரட்னம்

நாடளாவிய ரீதியில், நேற்று (06) அதிகாலை சுழன்றடித்த காற்றினால், நாட்டின் பல பாகங்களிலும் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. உயிர் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்றாலும், பொருள் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## அஹமதாபாத் வைத்தியசாலையில் பாரிய தீ;

# கொரோனா நோயாளர்கள் 8 பேர் கருகிப் பலியாகினர்

இந்தியா - குஜராத்தின் அஹமதாபாத்திலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றின் தீவிர சிகிச்சைப் பிரிவு விடுதியில், நேற்று (06) அதிகாலை பரவிய பாரிய தீயால், கொவிட்-19 நோயாளர்கள் எட்டுப்பேர் இறந்துள்ளனர்.

அதிகாலை மூன்று மணியளவில் தீ பரவியபோது சம்பவ இடத்துக்கு எட்டு தீயணைப்புப்படை இயந்திரங்களும், 10 அம்பியுலன்ஸ்களும் விரைந்துள்ளன.

இந்நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவு விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐந்து ஆண்களும், மூன்று பெண்களும் இறந்துள்ளனர்.



தொடர்ச்சி P2

## தேர்தல் சட்டத்தை மீறிய

# 82 பேர் கைது



2020 பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு நடைபெற்ற, நேற்று முன்தினம் (05) மட்டும், 82 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# ‘கடலுக்குச் செல்வதை இன்று தவிர்க்கவும்’

மன்னாரிலிருந்து கொழும்பு ஊடாக பொத்துவில் வரையிலான கடல், கொந்தளிப்பாக இருக்கும் என்பதலால், இன்று (07) கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு, வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



தொடர்ச்சி P2

# ஆதரவாளரின் செயலால் வேட்பாளர் வெளியேற்றப்பட்டார்

### வாக்கெண்ணும் நிலையத்தில் பதற்றம்

## மொட்டுக் கட்சியின் திருமலை வேட்பாளர்

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

வாக்கெண்ணும் நிலையத்துக்குள் ஆதரவாளர் ஒருவர் அத்துமீறி நுழைய முயன்றதையடுத்து, அந்த நிலையத்திலிருந்து குறித்த வேட்பாளரும் வெளியேற்றப்பட்டமையால், பதற்றமான நிலைமையொன்று



ஏற்பட்ட சம்பவம், திருகோணமலை விபுலானந்தா கல்லூரி வாக்கெண்ணும் மத்திய நிலையத்தில் ஏற்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# மலர்ந்தது மொட்டு

இரண்டு தொகுதிகளை ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சி, ஒரு தொகுதியில் வெற்றியீட்டியுள்ளது.

பெறுபேறுகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருந்த போதே, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார். அத்துடன், தனக்கு வாழ்த்துத் தெரிவித்த மாலைதீவு ஜனாதிபதி, துணை ஜனாதிபதி ஆகிய இருவருக்கும் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாக, தனது டுவிட்டர் தளத்தில் மஹிந்த ராஜபக்ஷ பதிவொன்றை இட்டுள்ளார்.

இந்நிலையில், வெளியாகியிருக்கும் பெறுபேறுகளின் அடிப்படையில், புதிய நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியே எதிர்க்கட்சியாக இருக்கும்.

# ரணில் தோல்வி

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, அதற்குப் பின்னர் நடத்தப்பட்ட சகல தேர்தல்களிலும் வெற்றியீட்டி, நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று, கொழும்பு மாவட்டத்திலிருந்து ரணில் தெரிவு செய்யப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் சபை முதல்வர், ஆளும் கட்சியின் பிரதான கொறடா, எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர் பதவிகளைப் பல தடவைகள் வகித்தார்.

தேர்தலில் தோல்வியடைந்தாலும் தேசியப் பட்டியலின் ஊடாக, நாடாளுமன்றத்துக்கு இம்முறை அவர், தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என அறியமுடிகின்றது. எனினும், ஐக்கிய தேசிய கட்சிக்கு, தேசியப் பட்டியலும் இல்லாமல் போவதற்கான சந்தர்ப்பம் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது அரசியல் வாழ்வில், 43 ஆண்டுகளுக்குப் பின்னர், ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விருப்பு வாக்கை எண்ணுவதற்கு ரஞ்சித் எதிர்ப்பு

விருப்பு வாக்கை எண்ணுவது, யாப்பை மீறும் செயலாகும். ரணில் விக்கிரமசிங்கவின் உந்துதலின் பேரிலேயே, அக்கட்சிகளின் சட்டத்தரணிகள் இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பழைய கட்சிக்கு படுதோல்வி

வடக்கில், வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி, முன்னிலையில் நிற்கிறது. தபால்மூல வாக்களிப்பிலும், முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

இதேவேளை, இலங்கையில் மிகப்பெரிய பழைய கட்சியென அறியப்பட்ட ஐக்கிய தேசிய கட்சி, இம்முறை நான்காவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. தென்னிலங்கையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முதலாமிடம் பெற்றிருந்த ஒவ்வோர் இடங்களிலும், ஐக்கிய தேசிய கட்சிக்கு நான்காவது இடமே கிடைத்தது.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவராக இருந்த சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, தென்னிலங்கையில் இரண்டாம் இடத்தில் முன்னேறிக்கொண்டிருக்கின்றது.

டெலிபோன் சின்னத்தில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி, இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டிருக்கும் நிலையில், திசைக்காட்டி சின்னத்தில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, மூன்றாவது இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ளது.

நேற்று மாலை 5.30 மணிவரையிலும் வெளியிடப்பட்ட முடிவுகளின்படி, ஐக்கிய தேசிய கட்சி பெரிய தோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஐக்கிய தேசிய கட்சியின் கிளர்ச்சியாளர்களைக் கொண்ட குழுவென அறியப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி, இரண்டாம் இடத்தில் இருக்கிறது.




அதன்பிகாரம், ஸ்ரீ லங்கா பொதுன பெரமுனவுக்கு 69 சதவீதமும் ஐக்கிய மக்கள் சக்திக்கு 16.94 சதவீத வாக்குகளும், தேசிய மக்கள் சக்திக்கு 5.83 சதவீத வாக்குகளும் கிடைத்தன. மிகப் பெரிய கட்சியென அறியப்பட்ட ஐக்கிய தேசிய கட்சிக்கு, 2.47 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன.

ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று நடத்தப்பட்ட 2020 பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பின் பின்னர், வாக்கெண்ணும் நடவடிக்கைகள், நேற்று (06) காலை 8 மணியிலிருந்து, பலத்த பாதுகாப்பு மத்தியில் முன்னெடுக்கப்பட்டன.

முதலாவது பெறுபேற்றை பிற்பகல் 2.30 மணியளவில் வெளியிடுவதற்கு எதிர்பார்திருப்பதாக, தேர்தல் ஆணைக்குழு ஏற்கெனவே அறிவித்திருந்தாலும், முதலாவது பெறுபேற்றை, பிற்பகல் 1 மணிக்கே வெளியிட்டது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் நேற்றுக்காலை வேளையில் நிலவிய சீரற்ற வானிலையால், வாக்கெண்ணும் நிலையங்களுக்கு நேரகாலத்துக்கு அதிகாரிகளுக்கு செல்லமுடியவில்லை. இதனால், வாக்கெண்ணும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டதாக அறியமுடிகின்றது.

இந்நிலையில், இறுதித் தேர்தல் பெறுபேற்றை, இன்று (07) மாலை 6 மணியளவில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# குருநாகல் மேயரை கைதுசெய்ய ஆலோசனை

13ஆம் நூற்றாண்டில், குருநாகல் இராசதானிக்குச் சொந்தமான புவனேகபாஹு ஹோட்டல் என்றழைக்கப்படும், இரண்டாம் புவனேகபாகு மன்னனின் சட்டசபை மண்டபம், ஜூலை 14ஆம் திகதி இடித்தழிக்கப்பட்டது.

உடைக்கப்பட்ட அந்த கட்டிடத்துடன் தொடர்புடைய அனைத்து கோப்புகளையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு, குருநாகல் நீதிமன்றத்தினால், குருநாகல் மேயருக்கு உத்தரவிட்டப்பட்டிருந்தது. சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரமே, இந்த உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

# 82 பேர் கைது



72 முறைப்பாடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரமே, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

# கொரோனா நோயாளர்கள் 8 பேர் கருகிப் பலியாகினர்

பணியாளரொருவரது பாதுகாப்பு அங்கியில் தீப்பிடித்த நிலையில், தீயை அணைப்பதற்காக அவர் விடுதியை விட்டு ஓடியுள்ளாரெனவும், ஆனால் முழு விடுதிக்கும் தீ வேகமாகப் பரவியதாக அஹமதாபாத் தீ மற்றும் அவசரசேவைகளின் பிரதான தீயணைப்புப்படை அதிகாரி ராஜேஷ் பட் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 சிகிச்சையில் இருந்த ஐந்து ஆண்களும், மூன்று பெண்களும் தப்பிக்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை என ராஜேஷ் பட் மேலும் தெரிவித்துள்ளார்.

விபத்து இடம்பெறும்போது 50 படுக்கை வைத்தியசாலையில்



ஏறத்தாழ 45 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் ஏனையோர் மீட்கப்பட்டு சர்தார் வல்லபாய் பட்டேல் மருத்துவ விஞ்ஞானங்கள் மற்றும் ஆராய்ச்சிக்கான நிறுவகத்துக்கு மாற்றப்பட்டதாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# ஆதரவாளரின் செயலால் வேட்பாளர் வெளியேற்றம்

இந்நிலையில், அந்த ஆதரவாளரை அழைத்துச் செல்வதற்கு, வாக்கெண்ணும் நிலையத்துக்குள்ளிலிருந்து வேட்பாளர் வெளியே வந்துள்ளார். அந்த வேட்பாளரின் ஆதரவாளரை உள்நுழைவதற்கு அனுமதிக்காத பொலிஸார், வேட்பாளரையும் வெளியேற்றிவிட்டனர்.

இதனையடுத்தே, பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான பியந்த பத்திரனவும் அவருடைய ஆதரவாளருமே இவ்வாறு வெளியேற்றப்பட்டனர்.




# 'புது முகங்களுடன் சாமர்த்திய அமைச்சரவை'

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் எசல பெரஹரா நிறைவு வைபவம், கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. இதன்போதே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஒரு மாதத்தில், இலங்கையில் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தில், பல்வேறான நிலைகளைக் கொண்ட மக்கள் பிரிவைச் சந்தித்தேன். அம்மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்டேன் எனத் தெரிவித்த ஜனாதிபதி, அம்மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும்" என்றார்.

காணி, பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலம், நிலையான வீட்டை நிர்மாணிப்பதற்குத் தேவையான வசதிகள், எதிர்காலப் பிள்ளைகளுக்குத் தேசிய பாடசாலை, சுத்தமான குடிநீர் ஆகியன தொடர்பிலேயே, மக்களிடமிருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன எனத் தெரிவித்த அவர், அத்தியாவசியத் தேவைகளான மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, நிச்சியமாக நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

இவ்வாறான பிரச்சினைகளை மீண்டும் கேட்க முடியாத நாட்டைக் கட்டியெழுப்புவதே தன்னுடைய தூரநோக்காகும் எனத் தெரிவித்த அவர், அரச சேவை செயற்றிறன் அற்றதாக இருக்குமாயின், நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்லமுடியாது எனத் தெரிவித்த அவர், போதைப் பொருள்கள் உள்ளிட்ட சமூகவிரோதச் செயற்பாடுகளின் ஊடாக, இந்தச் சமூகத்தை சீரழிப்பதற்கு இடமளிக்க முடியாது. பல்லாயிரம் வருடங்களுக்கு மேலாக பாதுகாக்கப்படும் எங்களுடைய கலாசாரம், நாகரீகம் மற்றும் பாரம்பரியம் ஆகியன தொடர்பில் ஒரு புரிதல் வேண்டும். விகாரைகள், தேவாலயங்கள், கோவில்களில் உருவாக்கப்படும் சமுதாயத்தை பணத்தால், உருவாக்க முடியாது" என்றார்.



# சுழன்றடித்தது காற்று மரங்கள் முறிந்தன: மின் தடைப்பட்டது

அத்துடன், அன்றாட செயற்பாடுகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. மின்சார தடை ஏற்பட்டதுடன், போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டிருந்தன. வீடுகளின் கூரைகள் தூக்கியெறியப்பட்டன. வீடுகள், பஸ்கள் உள்ளிட்ட வாகனங்களின் மீதும் பெறுமதியான சொத்துகளின் மீதும், பாரிய மரங்களின் கிளைகள் முறிந்துவிழுந்தன.

இன்னும் சில இடங்களில், வீதியோரங்களில் இருந்த பாரிய மரங்கள், வேறோடு பிடுங்கிக்கொண்டு வீதியின் குறுக்காக விழுந்தன. இதனால், அவ்வீதியின் ஊடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. மின்கம்பங்களிலும் மின்கம்பிகளிலும் மரக்கிளைகள் விழுந்தமையால், அவ்வாறான பிரதேசங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அத்துடன், இணைப்பு தொலைபேசிகளின் ஊடான தொடர்புகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

நேற்று அதிகாலை 4 மணியிலிருந்து சுமார் 1 மணிநேரம் கடுமையான மழையுடன் இந்தக் காற்று சுழன்றடித்தமையால் இவ்வாறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

காற்று, மழையால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தொடர்பில், சரியான தகவல்கள் திரட்டப்படவில்லையெனத் தெரிவித்த அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உலருணவுப் பொருள்களை விநியோகித்தல் மற்றும் நட்டஈடுவழங்குவது தொடர்பில், கிராமசேகர் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, நாட்டில் தற்போது நிலவும் வானிலை, சப்ரகமுவ, மேல், மத்திய, வடமேல் ஆகிய மாகாணங்களிலும் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் நிலவும் சீரற்ற வானிலை, இன்னும் சில நாள்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

சப்ரகமுவ, மத்திய ஆகிய இரண்டு மாகாணங்களிலும் காலி, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் உள்ளிட்ட இன்னும் சில பிரதேசங்களில் 100 மில்லிமீற்றருக்கு ஆகக் கூடிய மழைவீச்சியை எதிர்பார்க்கலாம் என வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மேல் மாகாணங்கள், ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களிலும், மத்திய மலையநாட்டின் மேற்கு சாரல் பிரதேசங்களையும் ஊடறுத்து, மணித்தியாலத்துக்கு 50க்கும் 60க்கும் இடைப்பட்ட வேகத்தில் காற்றுவீசும் என்றும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இரத்தினபுரி-எஹெலியகொட பிரதேசத்துக்கு உட்பட்ட அவிசாவளை-திவ்ரும்பிட்டிய தோட்ட, கீழ்பிரிவில், கடுங்காற்றுடன் கூடிய மழையால், பாரிய பலா மரமொன்றும் இறப்பர் மரங்கள் இரண்டும் முறிந்து, லயன்குடியிருப்பில் மீது விழுந்துள்ளது.

இதனால், அந்த லயன்குடியிருப்பில், நான்கு வீடுகள் சேதமடைந்தன. அந்த குடியிருப்பிலிருந்த 14 குடும்பங்களைச் சேர்ந்த 52 பேர், திவ்ரும்பிட்டிய கீழ் பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



# 'கடலுக்குச் செல்வதை...

நாட்டில், வடகிழக்குத் திசை, கடற்பிரதேசத்தில், மேகங்களில் ஏற்பட்டிருக்கும் செயற்பாட்டின் காரணமாக, மன்னார் முதல், சிலாபம், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலான பகுதியில், காற்றின் வேகம் அதிகரித்திருக்கும்.

அதனடிப்படையில், காற்றின் வேகம், மணித்தியாலயத்துக்கு 60 முதல் 70 கிலோமீற்றர் வேகத்தில் இருப்பதால், கடற்பிரதேசம் மிகவும் கொந்தளிப்பாக இருக்குமென திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மீனவர்கள் மட்டுமன்றி, கடற்படையினரும் கடலுக்கு ரோந்து செல்வதை தவிர்க்குமாறும் வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண வானிலை தொடர்பிலான அனர்த்தங்கள் தொடர்பில், 117 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, தகவல்களை பெற்றுக்கொள்ளலாம் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

# சுனில் தோல்வி

அதனடிப்படையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு 6 ஆசனங்களும் ஐக்கிய மக்கள் சக்திக்கு இரண்டு ஆசனங்களும் கிடைத்துள்ளன.

சமூக ஊடங்களைத் தவறாக பயன்படுத்தியமை;

## 4,316 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன

பொதுத் தேர்தல்களுக்காக சமூக ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக *4,316* முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஃபேஸ்புக்கிலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனையடுத்து ஃபேஸ்புக்கில் சட்டவிரோத பிரசாரங்களை மேற்கொண்ட *60* நபர்களின் பக்கங்களைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேநேரம் பொதுத் தேர்தல்களுக்கு ஃபேஸ்புக்கை தவறாகப் பயன்படுத்தியதாக மொத்தம் *2,000* முறைப்பாடுகள் ஏற்கெனவே தேர்தலுக்கு முன்னர் பெறப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் தினத்தன்று *143* தேர்தல் மீறல் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுகாதார விதிமுறைகளுக்குக் கீழ் தேர்தலை நடத்திய நாடாக

# இலங்கை சாதனை

உலகில் முதற்றடவையாக கொரோனா சுகாதார விதிமுறைகளின் கீழ், முறையாக பொதுத் தேர்தல் நடைபெற்ற நாடாக, வரலாற்றில் இலங்கை இடம்பிடிப்பதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார பாதுகாப்புடன் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு ஒத்துழைப்பை நல்கியதாகவும் இதற்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு தனது நன்றியையும் அவர் தெரிவித்துள்ளார்.

உரிய சுகாதார முறைப்படியும் அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்கியும் அதற்கேற்றவாறு வாக்களிப்பை முன்னெடுக்கும் வகையில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் சுகாதார அலுவலகர்களுக்குப் பயிற்சியளிக்கும்போது அவர்களுக்கு பாதுகாப்பை வழங்கி, வாக்காளர்கள் தொடர்பில் சுகாதார முறையை அறிமுகப்படுத்தி இந்தத் தேர்தலை சுகாதார முறையில் பாதுகாப்பாக நடத்த முடிந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எஸ்.எப்.லொக்கா கொலை;

## ஏழுபேரிடம் விசாரணை





அநுராதபுரம்- தஹாயியாகம பகுதியில், நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், எஸ்.எப்.லொக்கா என்ற 'எரோன் ரணசிங்க' கொலைசெய்யப்பட்டமை தொடர்பாக *7* பேரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் எஸ்.எப். லொக்கா மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு மோட்டார் சைக்கிள் ஊடாக தப்பிச் சென்றவர்கள் தொடர்பாக சிசிடிவி பதிவு ஊடாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக விரைவான விசாரணையை முன்னெடுப்பதற்கு விசேட குழுவொன்றும் அமைக்கப்பெற்றுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களை உடனடியாகக் கைதுசெய்யுமாறு அநுராதபுரம் பிரதான நீதவான் ஜனக்க பிரியந்த சமரசிங்கவால் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையைத் தொடர்ந்தே இவ்வாறு விரைவான விசாரணையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

அநுராதபுரம் - தஹாயியாகம சந்தியில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எஸ்.எப். லொக்கா என்ற எரோன் ரணசிங்க நேற்று (புதன்கிழமை) கொல்லப்பட்டுள்ளார்.

அநுராதபுரத்தில் *2015*ஆம் ஆண்டு, இரவு விடுதி ஒன்றில் வைத்து கராத்தே சம்பியனான வசந்த சொய்சா கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான எஸ்.எப்.லொக்கா என்பவரே இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## கடமைக்கு முன்...







பொதுத் தேர்தலுக்கான வாக்கெண்ணும் பணிகள், நேற்று (06) காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட நிலையில், வாக்கெண்ணும் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகள், விசேட பரிசோனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

(படப்பிடிப்பு: குஷான் பதிராஜ)

வாக்குச்சீட்டு சமூகவலைத்தளங்களில் பதிவேற்றம்;

## சிஐடி விசாரணை

நாடாளுமன்றத் தேர்தலுக்கான புள்ளடியிடப்பட்ட வாக்குச்சீட்டைப் படம்பிடித்து அதனை சமூகவலைத்தளத்தில் பதிவேற்றிய நபர்கள் தொடர்பான விசாரணைகளை, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

புள்ளடியிடப்பட்ட வாக்குச்சீட்டை சமூகவலைத்தளங்களில் பகிர்ந்தமைத் தொடர்பில் இரு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தேர்தல் சட்டவிதிமுறைகளை மீறும் வகையில் சமூகவலைத்தளத்தைப் பயன்படுத்தியமைத் தொடர்பில் *15* முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சி.ஐ.டியினர் தெரிவித்துள்ளதோடு, இந்த முறைப்பாடுகள் தொடர்பிலும் விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இருவேறு இடங்களில் இரு சடலங்கள் மீட்கப்பட்டன

கொழும்பின் இருவேறு பகுதிகளில், இரு சடலங்கள் நேற்று *(6)* காலை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு துறைமுக நகரம் மற்றும் பேலியகொட களனி கங்கை களுபாலத்துக்கு அருகிலும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆண்களின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. பிரேதப் பரிசோதனைகளுக்காக சடலங்கள் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 166,737 பிசிஆர் பரிசோதனைகள்

இலங்கையில் இதுவரை *166,737* பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் தேசிய மய்யம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், நேற்று முன்தினம் மாத்திரம், *880* பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தேசிய மய்யம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை, *2* ஆயிரத்து *839*ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைப்பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை *291*ஆக பதிவாகியுள்ளதாகவும் அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

**“ இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை, 2 ஆயிரத்து 839ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது**

இதேவேளை குணமடைந்தவர்களின் எண்ணிக்கை *2,537* ஆக உயர்ந்துள்ளது. அதேநேரம் கொரோனா தொற்று சந்தேகத்தின் பேரில் *68*பேர் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதரா அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சமுர்த்தி அதிகாரி மீது தாக்குதல்

மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரியொருவர் மீது, நேற்று முன்தினம் *(05)* தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எச்.எம்.வசந்த செனவிரத்ன என்ற இந்த அதிகாரியின் தம்பான- பெலிகல்லே பகுதியிலுள்ள வீட்டுக்கு வந்தக் குழுவொன்று, இந்த அதிகாரியைத் தாக்கியதால், அதிகாரி மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளாரென மஹியங்கனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**“ மஹியங்கனை பிரதேசத்தின் முன்னாள் எம்.பி தேனுக விதானகமகேயின் ஆதரவாளர்களே தாக்குதல் நடத்தியதாக தாக்குதலுக்கு இலக்கானவர் தெரிவித்துள்ளார்**

மஹியங்கனை பிரதேசத்தின் முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர் தேனுக விதானகமகேயின் ஆதரவாளர்களே தன்மீது தாக்குதல் நடத்தினார்களென, தாக்குதலுக்கு இலக்கானவர் தெரிவித்துள்ளார்.

தான் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேராவுக்கு அரசியல் ரீதியாக உதவி செய்தமையை அடிப்படையாக வைத்தே, தன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில், மஹியங்கனை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், நேற்று *(6)* மாலை *3* மணிவரை எந்தவொரு சந்தேகநபரும் கைதுசெய்யப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


### விற்பனைக்கு

கொழும்பு-10 மாளிகாவத்தை தொடர்மாடி கட்டடத் தொகுதியில், பிரதான வீதிக்கு அருகில் முழுமையாக டைல் பிடிக்கப்பட்ட 2 படுக்கையறைகள், 2 குளியலறைகளுடன் கீழ் மாடி வீடு விற்பனைக்குண்டு. 071-8413831

கொழும்பு - மொரட்டுவையில் இருவர் மட்டும் இருக்கும் வீட்டுக்கு சமைப்பதற்கும் சுத்தம் செய்வதற்கும் நம்பிக்கைக்குரிய பெண்ணொருவர் தேவை. 0773833848

### ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட் பொது ஏலம்

ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட் இன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் அடகு வைக்கப்பட்டு 30 ஜீன் 2020 திகதியுடன் முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் 04 செப்டெம்பர் 2020 திகதி அன்று காலை 10. 00 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் பகிரங்க பொது ஏலத்தில் விற்பனைச் செய்யப்படும்.

இல. 187, பிரதான வீதி, பண்டாரவளை.
இல. 09/சி, பிரதான வீதி, அனுராதபுரம்.
இல. 10/பி, பிடுவல வீதி, எல்பிடிய.
இல. 408, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
இல. 34, சுரதிஸ்ஸ மாவத்தை, குருநாகல்.
இல. 100, புதிய பஸ் தரிப்பிடம், மொனராகளை.
இல. 28, பல்லேகம, எம்பிலிப்பிட்டிய.
இல. 91, அனாகரீக தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல. 119/ஏ, கொடுகொடல்ல வீதி, கண்டி.

IDEAL Finance

**ஐடியல் ஃபினான்ஸ் லிமிட்டெட்**
இல. 299, கலாநிதி. கொல்வின் ஆர். டீ சில்வா மாவத்தை, (யூனியன் பிளேஸ்), கொழும்பு - 02.
தொ. பேசி: 0112 396060 தொ. நகல்: 0112 396757

ஏலத் திகதியை மாற்றும் உரிமை ஐடியல் ஃபினான்ஸ் நிறுவனத்திற்கு உண்டு

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

சீரற்ற வானிலையால்

# 10 மாவட்டங்களுக்கு பாதிப்பு தொடர்கிறது

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக, 10 மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பல பகுதிகளில், நேற்று முன்தினம் பெய்த கடுங்காற்றுடன் கூடிய மழை காரணமாக, 483 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

குருநாகல், இரத்தினபுரி, களுத்துறை, கம்பஹா, கேகாலை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை நுவரெலியா ஆகிய மாவட்டங்களில், கடுங்காற்றுடன் கூடிய வானிலை நீடித்துவருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக, ஐந்து பேர் காயமடைந்துள்ளதுடன் பாரிய

**“ சப்ரகமுகவ, மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை,களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் 50 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கலாம் என்று, வானிலை அவதான நிலையம் மேலும் கூறியுள்ளது**

மரங்கள் முறிந்து விழுந்ததால் பல வீதிகளின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்ததாக, அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சப்ரகமுவ, மத்திய, மேல், வடமேற்கு ஆகிய மாகாணங்களில், இன்றும் (7) கடும் மழை பெய்யக்கூடும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது. சப்ரகமுகவ, மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை,களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் 50 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கலாம் என்று, வானிலை அவதான நிலையம் மேலும் கூறியுள்ளது.



## கடும் காற்றால் 88 வீடுகள் சேதம்



ரஸீன் ரஸ்மின்

புத்தளம் மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு (5) பெய்த கடுங்காற்றுடன் கூடிய மழை காரணமாக, மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில், 88 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று, புத்தளம் மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, முந்தல், கருவலகஸ்வல, நாத்தாண்டி, வண்ணாத்திவில்லு, பள்ளம ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில், 92 குடும்பங்களைச் சேர்ந்த 397 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் முந்தல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உடப்பு கிராமத்தில், பாடசாலை உள்ளிட்ட 61 வீடுகளும் கருவலகஸ்வல பிரதேச செயகத்துக்கு உட்பட்ட பகுதியில் 22 வீடுகளும், நாத்தாண்டி, வண்ணாத்திவில்லு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் தலா 2 வீடுகளும், பள்ளம பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒரு வீடும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, முந்தல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உடப்பு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளை முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திக்கா பிரதேச செயலக உத்தியோகத்தர்களோடு நேரில் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தார்.

## 150,000 வாக்காளர் அட்டைகள் தேங்கின

நாடாளுமன்றத் தேர்தலுக்காக சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் வாக்காளர் அட்டைகள், தபால் நிலையங்களிலேயே தேங்கிக் கிடப்பதாக, தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜூலை மாதம் 29ஆம் திகதியுடன், வீட்டுக்கு வீடு வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் நிறைவடைந்த நிலையில், சுமார் 2,200 தபால் நிலையங்களில், 57,600 வாக்காளர் அட்டைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன என்று, தபால் மா அதிபர் ராஜித்த ரணசிங்க, நேற்று (06) தெரிவித்தார்.

தங்களுடைய அடையாளத்தை உறுதிப்படுத்திவிட்டு, குறித்த வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் இதற்காக, நேற்று முன்தினம் (05) மாலை 5 மணி வரை காலஅவகாசமும் வழங்கப்பட்டிருந்தது என, அவர் தெரிவித்தார்.

தங்கியிருக்கும் இடம் மாறியுள்ளதால், குறித்த வாக்காளர் அட்டைகளைப் பகிர்ந்தளிக்க முடியாமல் போனதாகவும் இதனால், அவரவர் வாக்காளர் அட்டைகள், தபால் நிலையங்களில் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவற்றை உரியவர்கள் எடுத்துச்செல்லத் தவறியுள்ளனர் என்றும், தபால் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

**“ ஒப்படைக்கப்பட்டதாகவும் அவற்றை உரியவர்கள் எடுத்துச்செல்லத் தவறியுள்ளனர் என்றும், தபால் மா அதிபர் மேலும் தெரிவித்தார்**

புதுக்குடியிருப்பில்

## வாக்களிப்பை படம்பிடித்த நபர் கைது

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, உடையார்கட்டுப் பகுதியிலுள்ள குரவில் கிராமத்தில் அமையப்பெற்ற வாக்குச்சாவடியில், வாக்களிப்பதைப் புகைப்படம் எடுத்த இளைஞன் ஒருவரை, புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தேர்தல் விதிமுறைகளை மீறி, வாக்களிப்பதை அலைபேசியில் படமெடுத்த போது, வாக்குச் சாவடியில் நின்ற பொலிஸாரால் விசாரணை செய்தபோது, அவரது அலைபேசியில் புகைப்படம் இல்லாத நிலையிலும், புதுக்குடியிருப்பு பொலிஸார், நேற்று (06) அவரைக் கைது செய்துள்ளனர்.




தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிபென்டர் மோதியதில் இருவருக்குக் காயம்

கம்பஹா மாவட்ட வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்கள் பயணித்த டிபென்டர் வாகனமானது, மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதியதால், அதில் பயணித்த தம்பதி காயமடைந்து மீரிகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென, மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.

மீரிகம- வேவல்தெனிய வீதி, பண்டாரநாயக்க பாடசாலைக்கு அருகில், நேற்று முன்தினம் (5) மாலை 6.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், இதில் காயமடைந்த இருவரும் தேர்தல் கடமைகளை முடித்துவிட்டுப் பயணித்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துத் தொடர்பில் மீரிகம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பாடசாலைகளில்

## தொற்று நீக்கும் படையினர்

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவில் வாக்குச் சாவடிகள் அமைந்திருந்த பாடசாலைகளைத் தொற்று நீக்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளாக அமையப்பெற்ற 5 பாடசாலைகளைத் தொற்று நீக்கும் நடவடிக்கையில், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள 68ஆவது படைப்பிரிவினர் ஈடுபட்டுள்ளார்கள்.



புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் அமைந்துள்ள மத்திய கல்லூரியில் தொற்று நீக்கும் நடவடிக்கை, நேற்று (06) முன்னெடுக்கப்பட்டது.

68ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் உபாலிராஜபக்ஷ, அப்படைப்பிரிவின் 2ஆவது பிரிவு கட்டளை அதிகாரி கேணல் சமிந்தகலப்பதி, 18ஆவது விஜயபாகு படைப்பரிவின் தளபதி மேஜர் தர்சனசிறீசேன உள்ளிட்ட படை அதிகாரிகள் கலந்துகொண்டு, தொற்று நீக்கும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தனர்.

மேலும், புதுக்குடியிருப்பு நகரை அண்டிய பகுதிகளில் 05 பாடசாலைகள் தொற்று நீக்கப்படவுள்ளதாக, படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

வாக்களிப்பு நிலைய பொறுப்பதிகாரிகள்

## இருவருக்கு திடீர் சுகவீனம்

தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த வாக்களிப்பு நிலைய பொறுப்பதிகாரிகள் இருவர், திடீர் சுகவீனமுற்ற நிலையில், வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வத்தளை, அத்தனகல்ல ஆகிய தேர்தல் தொகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றிய அதிகாரிகள் இருவரே திடீர் மயக்கமுற்றுள்ளனர்.

இதனையடுத்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட இருவருள் ஒருவர், ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின், கடமைகளுக்குத் திரும்பியுள்ளனரென்றும் மற்றையவர் சிகிச்சைகளின் பின்னர், வீடு திரும்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அதிகாரிகள் இருவரும் அதிக நேரமாக முகக் கவசம் அணிந்திருந்தமையால், இவ்வாறு மயக்கமடைந்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**“ வத்தளை, அத்தனகல்ல ஆகிய தேர்தல் தொகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றிய அதிகாரிகள் இருவரே திடீர் மயக்கமுற்றுள்ளனர். அதிகாரிகள் இருவரும் அதிக நேரமாக முகக் கவசம் அணிந்திருந்தமையால், மயக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது**

## தேர்தல் கடமையில் விசேட தேவையுடையவர்

விசேட தேவையுடைய ஒருவர், தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த சம்பவமொன்று, கம்பஹா - சியனே விஞ்ஞானபீட வாக்களிப்பு நிலையத்தில், நேற்று முன்தினம் (06) பதிவாகியுள்ளது.

பிறப்பிலேயே விசேட தேவையுடையவரான மஹேஸ் ரத்னசிறி, கம்பஹா - கலகெடியேன தர்மாஷோக வித்தியாலயத்தில், ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார்.

எனினும், தேர்தல் ஆணைக்குழுவால், அவர் சாதாரண அரச பணியாளராகத் தேர்தல் கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார்.

இந்த ஆசிரியரின் நிலையை அறிந்துகொண்ட தேர்தல் ஆணைக்குழு, அவரைத் தேர்தல் கடமைகளிலிருந்து விலக்க நடவடிக்கை எடுத்த போதும், ஆசிரியரின் கோரிக்கைக்கமைய, அவர் கடமைகளில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதற்கமைய, சியனே விஞ்ஞானக் கல்லுரியில் நடைபெற்ற வாக்களிப்பில், இவர் கடமைகளுக்காக அமர்த்தப்பட்டார். இதன்போது, அங்கு கடமைகளில் ஈடுபட்ட அதிகாரிகளைத் தெளிவுபடுத்தும் கடமையை, இவர் முன்னெடுத்திருந்தார்.

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி

## வாக்களிப்பில் பங்கேற்ற மூவர் புனானைக்கு அனுப்பி வைப்பு

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி வாக்களிப்பில் பங்கேற்ற லங்காபுர பிரதேச செயலாளர் உட்பட அவரது குடும்பம், புனானை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று, லங்காபுர பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைவாக மேற்படி பிரதேச செயலாளரும் அவரது குடும்பமும் வீட்டுக்குள்ளேயே தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில், மேற்படி பிரதேச செயலாளர் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி வாக்களிப்பில் பங்கேற்றுள்ளார்.

இது தொடர்பில், பொலிஸாரும் பொதுசுகாதார பரிசோதகர்களும் விசாரணைகளை மேற்கொண்டபோது, அவர் தனது மனைவியுடன் வாக்களிப்பில் பங்கேற்றதை ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், பிரதேச சபை தவிசாளர் அவரது மனைவி மற்றும் அவர்களது இரு பிள்ளைகள் அனைவரும் புனானை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

**“ பிரதேச சபை தவிசாளர் அவரது மனைவி மற்றும் அவர்களது இரு பிள்ளைகள் அனைவரும் புனானை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்**

சம்பாயோவுக்கு அடைக்கலம் வழங்கியது யார்?

## விசாரணைக்குப் பணிப்பு

நீர்கொழும்பு சிறைச்சாலையிலுள்ள கைதிகளுக்கு, சொகுசு வசதிகளை வழங்கியமையுடன் தொடர்புடைய நீர்கொழும்பு சிறையின் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி உள்ளிட்ட நால்வர் தலைமறைவாகியிருப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தவர்கள் யார் என்பது தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிடுமாறு, சட்டமா அதிபர் தப்பல டீ லிவேரா, பதில் பொலிஸ்மா அதிபருக்கு நேற்று (6) உத்தரவிட்டுள்ளார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த காலப்பகுதிக்குள் சந்தேகநபர்களின் அலைபேசி தகவல்களை ஆராய்ந்து, அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியவர்களைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக, சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி, அரசாங்க சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக 4 காரணங்கள் தொடர்பில் விசாரணை செய்து, அறிக்கையிடுமாறும் சட்டமா அதிபர் பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளதாக சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

**“ நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அதிகாரி அநுருத்த சம்பாயோ உள்ளிட்ட நால்வரைக் கைதுசெய்யுமாறு, விடுக்கப்பட்ட பிடியாணையை உடனடியாக செயற்படுத்தாமைக்கான காரணம் என்ன என்பதையும் அநுருத்த கைதுசெய்யப்பட்டாரா அல்லது பொலிஸில் சரணடைந்தாரா என்பது தொடர்பான அறிக்கையையும் வழங்குமாறு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்**

அத்துடன், நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அதிகாரி அநுருத்த சம்பாயோ உள்ளிட்ட நால்வரைக் கைதுசெய்யுமாறு, விடுக்கப்பட்ட பிடியாணையை உடனடியாக செயற்படுத்தாமைக்கான காரணம் என்ன என்பதையும் அநுருத்த கைதுசெய்யப்பட்டாரா அல்லது பொலிஸில் சரணடைந்தாரா என்பது தொடர்பான அறிக்கையையும் வழங்குமாறு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் சிறைச்சாலைக்குள் கண்டுபிடிக்கப்பட்ட தடை செய்யப்பட்ட பொருள்களுடன் காணப்பட்ட மின் தராசைப் பயன்படுத்தி, சிறைச்சாலை அதிகாரிகள் போதை வர்த்தகத்தில் ஈடுபட்டனரா? என்பது குறித்தும் விசாரணைகளை முன்னெடுக்குமாறும் சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

## பிரேமலால் ஜயசேகரவின் மரண தண்டனைத் தீர்ப்பு;

# ‘நீதிபதிகளுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை’

ஏ.ஏ.எம்.பாயிஸ்

கொலைக் குற்றச்சாட்டின் பேரில், தற்போது சிறைவாசம் அனுபவித்து வரும் முன்னாள் பிரதியமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளருமான பிரேமலால் ஜயசேகரவுக்கு, மரண தண்டனை தீர்ப்புக்கு எதிராக நீதிமன்றம் சென்று நியாயம் கேட்கும் உரிமையுண்டு” என, முன்னாள் அமைச்சரும் இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளருமான தலதா அத்துகோரல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது, “2015.01.05ஆம் திகதி, எனது ஆதரவாளர் ஒருவர் காவத்தையில் கொலைசெய்யப்பட்டார். எனவே, அவருக்கு நியாயம் கிடைப்பதற்காக நான் சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்து, ஒத்துழைப்பை வழங்கினேன்.

“ஆனால், இவ்விடயம் தொடர்பில் நான் நீதிபதிகளுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. எனது கட்சிக்காரரின் நியாயத்துக்காகப் போராடினேன்.

“கொலைக் குற்றச்சாட்டு ஏற்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தில் நியாயம் கேட்க உரிமை இருக்கிறது. அவர்கள் அதற்கான உரிய அத்தாட்சிகளை சமர்ப்பித்து, நியாயம் கேட்பதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. நீதிமன்றம் அதற்குரிய தீர்மானத்தை மேற்கொள்ளும்” என்றார்.



# மூன்று விபத்துகளில் மூவர் மரணம்




தம்புளை - கிரிந்திவெல, சிலாவத்துறை ஆகிய பிரதேசங்களில், நேற்று (6) இடம்பெற்ற மூன்று விபத்துகளில், மூவர் உயிரிழந்துள்ளனரென, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, குருநாகல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்புளை- குருநாகல் வீதியில், லொறியொன்றும் ஓட்டோவொன்றும் மோதியதில், ஓட்டோவில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், அவர் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்த முடியவில்லை என, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேக்கவத்த- குட்டிவல வீதி, கல்கடுவ பிரதேசத்தில், ஓட்டோவொன்று பாதசாரி மீது மோதியதில், மினுவாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயது நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேபோன்று, சிலாவத்துறை- அரிப்பு, நாணாட்டான் பிரதேசத்தில், மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுபாட்டை இழந்ததால் ஏற்பட்ட விபத்தில், நபரொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## இரு கட்சி ஆதரவாளர்கள் மோதல்;

# நால்வர் வைத்தியசாலையில் அனுமதி

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை பகுதியில், இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே நேற்று முன்தினம் (05) மாலை ஏற்பட்டுள்ள மோதல் சம்பவத்தில், நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தடிகளைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்ட இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நால்வரும், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கூரிய ஆயுதத்தால் தாக்கி

# இளைஞன் கொலை

கேகாலை நகரில் ஏற்பட்ட தகராறு ஒன்றில், இருவர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் இளைஞன் ஒருவர், கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம், நேற்று முன்தினம் (05) இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தாக்குதலில், கேகாலை, வின்சன் விக்கிரமசிங்க மாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ள நிலையில், சந்தேகநபரைக் கைது செய்வதற்காக கேகாலை பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# விசேட பொலிஸ் சோதனைகள்

தேர்தல் நிறைவுற்ற மறுநாளான நேற்று (06), அம்பாறை மாவட்டம் முழுவதும் பரவலாக பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் சோதனையிடப்பட்டன. இதன்படி, காரைதீவு பிரதான வீதியில், பொலிஸார் சோதனையில் ஈடுபட்டுள்ளமையைப் படத்தில் காணலாம்.

(படம் : சகா)

## லெபனான் வெடிப்புச் சம்பவம்;

# காயமடைந்த இலங்கையர்களின் எண்ணிக்கை உயர்வு

லெபனான் தலைநகரான பெய்ரூட்டில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த இலங்கையர்களின் எண்ணிக்கை, 10ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த 10 பேரும், தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகின்றனர் என, லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள துறைமுகத் தொழிற்சாலையொன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை (04) இலங்கை நேரப்படி இரவு 08.30 மணியளவில் பாரிய வெடிப்பு சம்பவம் பதிவாகியது.

இதில், குறைந்தது 135 பேர் உயிரிழந்ததுடன், 5,000 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

குறித்த வெடிப்புச் சம்பவத்தில் லெபனானில் வசிக்கும் இலங்கையரின் வீடுகளும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளதாக, அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பெய்ரூட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு சிறிது சேதம் ஏற்பட்டிருந்தப்போதும் தூதரக அதிகாரிகள் யாரும் காயமடையவில்லை என, தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லெபனானில் சுமார் 25,000க்கு மேற்பட்ட இலங்கையர்கள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## சிறுமி வன்புணர்வு; மதகுருவுக்கு

# 17 வருடங்கள் கடூழியச் சிறை

க.அகரன்

முல்லைத்தீவு - உடையார்கட்டுப் பகுதியில், மதகுருவின் வீட்டில் கற்பதற்காகத் தங்கியிருந்த சிறுமியை வன்புணர்ந்த குற்றத்துக்காக, மதகுருவுக்கு 17 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி, வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மீள்குடியேற்றத்தின்போது, முல்லைத்தீவு, உடையார் கட்டுப்பகுதியில் குடியேறிய குடும்பத்தைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமியொருவர், தனது உயர்தர வகுப்பைக் கற்பதற்காக, இடப்பெயர்வின் போது செட்டிகுளம் முகாமில் அறிமுகமான மேற்படி மதகுருவின் வீட்டில் தங்கியிருந்த நிலையில், 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிறுமியை, மதகுரு வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

05 பெண் பிள்ளைகளின் தந்தையான 48 வயது மதகுரு, தனது வீட்டில் தங்கியிருந்த சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றத்துக்காக, சட்ட மா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பகர்வுப் பத்திரம் 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட நிலையில், வவுனியா மேல் நீதிமன்றத்தால் விசாரணைகள் இடம்பெற்று, கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதன்பிரகாரம், மதகுருவுக்கு 17 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் 5,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டதுடன், அபராதப் பணத்தைச் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டணையும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 3 இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டுமெனவும் அதனைச் செலுத்தத் தவறின், 24 மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கி, மேல்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.



## வடக்கில்

# குறைந்த வருமானம் பெறும் குடும்பத்துக்கு புது வீடு

வடக்கில் குறைந்தவருமானம் பெறும் குடும்பமொன்றுக்கு புதியவீடு வழங்கப்பட்டது.

யாழ். பிரதேசத்தில் வாழ்கின்ற குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற குடும்பங்களுக்கு வீடுகள் வழங்குகின்ற வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக, மானிப்பாய், உடுவில் (தெற்கு) பிரதேசத்தில் அமைக்கப்பட்ட புதிய வீடொன்று, யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவன் வணிகசூரிய தலைமையில், நேற்று (06) பயனாளியிடம் பொறுப்பளிக்கப்பட்டது.

இந்த வீடு, நன்கொடையாளர் குமார வீரசூரிய, அவருடைய நெருங்கிய நண்பர்களுடைய பூரண நிதியனுசரணையில் அமைக்கப்பட்டது.

**இந்த நிகழ்வில், 51ஆவது கட்டளைத் தலைமையகத்தின் தளபதி, 511ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி, இராணுவ உயரதிகாரிகள், இராணுவ வீரர்கள் உட்பட குறிப்பிட்ட அளவிலானோர் கலந்துகொண்டிருந்தனர்**

இவ்வீடானது 51ஆவது படைப்பிரிவுத் தலைமையத்தின் ஏற்பாட்டின் கீழ், 511வது படைப்பிரிவின் நெறிப்படுத்தலில் 15ஆவது தேசிய பாதுகாப்பு படையணியினரின் சரீர ஒத்துழைப்புடன், வீட்டின் கட்டுமானப் பணிகள் யாவும் 37 நாள்களுக்குள் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், 51ஆவது கட்டளைத் தலைமையகத்தின் தளபதி, 511ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி, இராணுவ உயரதிகாரிகள், இராணுவ வீரர்கள் உட்பட குறிப்பிட்ட அளவிலானோர் கலந்துகொண்டிருந்தனர்.

## பூநகரியில்

# மரக்குற்றிகள் கைப்பற்றல்

மு.தமிழ்ச்செல்வன், சுப்ரமணியம் பாஸ்கரன்

**இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள மரக்குற்றிகளின் பெறுமதி, சுமார் 08 இலட்சம் ரூபாய் எனப் பொலிஸார் தெரிவித்தனர். லொறியின் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்**

கிளிநொச்சி - பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசபுரம் காட்டில் இருந்து, சிறிய லொறியொன்றில் சட்டவிரோதமாக யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை மரக்குற்றிகளை, வில்லடி பகுதியில் வைத்து, பூநகரி பொலிஸார் நேற்று (06) கைப்பற்றியுள்ளனர்.

பூநகரி பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே, குறித்த மரக்குற்றிகள், பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள மரக்குற்றிகளின் பெறுமதி, சுமார் 08 இலட்சம் ரூபாய் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர் அடையாளம் காணப்பட்டுள்ளாரெனத் தெரிவித்த பூநகரி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## திருநெல்வேலியில்

# வீடொன்றில் தீ; பெண் உயிரிழப்பு

வி.நிதர்ஷன், எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியில் உள்ள வீடொன்றில், திடீரென ஏற்பட்ட தீ விபத்தால், அவ்வீட்டிலிருந்த 67 வயதுடைய பெண்ணொருவர், தீயில் எரிந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம், நேற்று (06) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்தத் தீ விபத்து எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பட்டறிவில்லாத தமிழ்த் தலைமைகள்...

அதீத நம்பிக்கை இருப்பதில் தப்பில்லை; ஆனால், அதுவே மிதமிஞ்சிப்போனால் தப்பாகிவிடும் என்பதற்கு, நடந்து முடிந்த பொதுத்தேர்தல் சாட்சியாக அமைந்திருக்கிறது. தமிழ்த் தலைமைகளின் அதிமிஞ்சிய நம்பிக்கையும், அபரிமிதமான போக்கும் அவர்களுக்கே ஆப்பாக அமைந்திருப்பதைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. குறிப்பாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பின்னடைவு, நல்லதொரு பாடத்தைக் கற்றுக்கொடுத்திருக்கிறது.

தாம் எதைச் செய்தாலும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள், தங்களால்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியும் என்ற மமதையில் மார்தட்டிக்கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு, இம்முறை மக்கள் சரியான பாடத்தைப் புகட்டி இருக்கிறார்கள். அதேவேளை, தமிழ் வாக்காளர்களின் திட்டமிடாத வாக்களிப்புக் காரணமாக, வாக்குகள் சிதறடிக்கப்பட்டிருக்கின்றன. எல்லோருக்கும் வாக்களிக்க வேண்டும் என்பதற்காகத் தம் தாராள மனதைத் தமிழ் மக்கள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இது ஒருவகையில் நல்லதாகப்பட்டாலும் மறுபுறத்தில், குழுவாகச் செயற்பட முடியாமல் போயுள்ளமை கவனிக்கத்தக்கது.

தற்போதைய வாக்களிப்பின் அடிப்படையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதிகபட்சமாக 10 ஆசனங்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய தமிழ்க் கட்சிகளின் தெரிவுகள் ஒற்றை இலக்கத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், அவர்களின் குரல் எப்போதும் நாடாளுமன்றத்தில் எடுபடப்போவதில்லை என்பது தெளிவாகிறது. இத்தகைய சூழ்நிலையில், தமிழர் பிரதிநிதிகள் அனைவரும் ஒருமித்துப் பயணிப்பதை உறுதிப்படுத்துவதனூடாகவே, தமிழ் மக்களின் அபிலாசைகளை ஓரளவுக்கேனும் நிவர்த்திக்கக்கூடியதாக இருக்கும்.

வரட்டுக் கௌரவத்துக்காக நடைமுறைச் சாத்தியமில்லாத போக்கில் பயணித்ததன் விளைவை, இப்போது அனைவரும் அனுபவிக்கின்றனர். இப்போக்கு இனிமேலும் நீடிக்குமாக இருந்தால், ஒருபோதும் நினைத்ததைச் சாதிக்க முடியாமல் போய்விடலாம். ஆகையால், மக்களின் நலன்சார்ந்து செயற்படுவது பற்றிச் சிந்திக்க வேண்டும். குறைந்தபட்சம், அரசோடு இணைந்து, அமைச்சுப் பதவிகளைப் பெற்று, மக்கள் சேவையைத் தொடர வேண்டும். அதைவிடுத்து, எதிர்ப்பு அரசியல்தான் சாத்தியமெனத் தொடர்ந்தால், மேலும் ஐந்து ஆண்டுகளுக்குக் காத்திருக்க வேண்டி ஏற்படலாம்.


நடைமுறைச் சிக்கல்களை, மக்கள் நன்குணர்த்தி இருக்கின்றனர். தமிழர் பிரதேசங்களில் சிங்களக் கட்சிகளின் கை ஓங்கியிருப்பதையும் இங்கு கவனிக்க வேண்டும். அபிவிருத்தி என்ற ஒன்றைச் சொல்லிக்கொண்டு அவர்கள், தங்களது ஊடுருவலைத் தொடங்கியிருக்கிறார்கள். இதேநிலை நீடிக்குமானால், தமிழர் எதிர்காலம் கேள்விக்குறியாவதைத் தடுக்க முடியாது.

தமிழ்Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk









## வாழ்வியல் தரிசனம்

தெரியாத நல்ல விடயங்களைத் தெரிந்து கொள்ள விளைவதே, கல்வி கற்பதன் நோக்கமாகும். பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் மட்டும், கல்வியைப் படித்து முடித்துவிட முடியாது. இதற்கு வெளியேயும் கற்றலுக்கான தேடல் பரந்துவிரிந்து கிடக்கிறது.

எல்லாவற்றையும் ஒருவர் சொல்லிக் கொடுக்க முடியாது. எமது வாழ்நாளில் ஒருவரிடத்தில் மட்டும் படித்து அறிவதில்லை. பற்பல நபர்கள் மூலமும் தினம், தினம் தெரியாத பல விடயங்களை அறிந்து வருகின்றோம் அவர்களில் கூட, ஆசிரியர்கள் ஒருவகையினர் தான். பற்பல ஆசிரியப் பெருந்தகைகளிடம் அறிவைத் தேடினாலும், நாங்களும் சுயதேடுதல் மூலமும் தெளிவான அறிவைத் தேடியே ஆகவேண்டும்.

எமக்குள் தெளிவு, அவசியமாகின்றது. சொல்வதை மட்டும் கேட்காமல், உங்களிடமும் ஆய்வு மனப்பான்மை வந்தேயாக வேண்டும். ஆய்வு மனப்பான்மை வந்துவிட்டால், மூளை விரிவடையும்; திருப்தி உருவாகும். அறிவுப்பெருக்கத்துக்கு உங்களின் பங்கு என்ன? திறமைக்குள் உள்நுழைக.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# திருவிழா முடிந்தது... சோற்றுக்கு என்ன வழி?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

தேர்தல் திருவிழா முடிந்தது. தேர்தல் வாக்குறுதிகளும் இத்தோடு முடிந்துபோம். இனிக் கொஞ்சம் நிதானமாகச் சிந்திப்போம்.

கொவிட்-19 தொற்றுக் காலத்தில், இலங்கை பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கிறது. கடந்த ஒருமாத கால தேர்தல் பிரசாரங்கள், நெருக்கடிகளை உருமறைப்புச் செய்து, மக்களின் கவனத்தைக் கச்சிதமாகத் திசைதிருப்பி இருக்கின்றன. ஆனால், அவை ஒவ்வொன்றாக, இலங்கையர்களைப் பாதிக்கும். அந்தப் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கு, நாம் தயாராக இருக்கிறோமா?

நடந்து முடிந்துள்ள தேர்தல், இனங்களுக்கு இடையே ஒற்றுமையை வளர்ப்பதற்குப் பதிலாக, இனமுரண்பாடுகளைக் கூர்மையாக்கி உள்ளது. இது எதிர்பார்த்ததே!

ஒருபுறம், சிங்கள பௌத்த தேசியவாதத்தின் சிறந்த காவலர்கள் யார் என்ற போட்டியில், பிரதான சிங்களக் கட்சிகள் களமிறங்க, மறுபுறம், தமிழ்த் தேசியத்தின் காவலர்கள் யார் என்ற போட்டியில், தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டன. இன்னொருபுறம், தமிழ்-முஸ்லிம் உறவை, வெகுவாகப் பாதிக்கும் வகையில், கிழக்கில் காட்சிகள் அரங்கேறின.

தமிழ்த் தேசியம் போலவே, முஸ்லிம் தேசியமும் பிளவுபட்டு, வாக்குவங்கி அரசியலுக்குள் சிக்கித் தவிக்கிறது. மலையகத் தமிழரது அரசியல், சமரச-சலுகை அரசியலுக்குள் தன்னைச் சீரழித்து, அதிலிருந்து மீள இயலவில்லை. உருவான மாற்றுகளும், அதே சேற்றுக்குள் தம்மைப் புதைத்ததைவிட, அப்பால் எதையும் சாதிக்கவில்லை.

உணர்ச்சிகரத் தேசியவாதங்கள் தூண்டப்பட்ட வீராவேசப் பேச்சுகள் முடிவுக்கு வந்தாலும், அவை ஏற்படுத்திய தாக்கம் பெரிது. சமூகங்களுக்கிடையே இனப்பகையும் துவேசமும் தூண்டப்பட்டுள்ளன.

பெருந்தேசிய அகங்காரம், புதிய கட்டத்தை எட்டியுள்ளது. இதனால் ஆபத்துக்கு உள்ளாகியுள்ள சிறுபான்மை இனங்கள், தங்களுக்குள் முரண்பட்டு நிற்கின்றன. தேர்தல் அரசியல், சிறுபான்மையினருக்கு அளித்துள்ள மோசமான பரிசுகளில், இது முதன்மையானது.

பிரச்சினைகளை, மற்றவர்களுடைய கண்ணோட்டத்திலும் விளங்குவதன் மூலமே, அமைதியான தீர்வுகளைப் பெற இயலும். மதவாதமாயினும் தேசியவாதமாயினும் இனவாதமாயினும், அவை, அவ்வாறான ஒரு விரிந்த பார்வையை மறுக்கின்றன.

குறிப்பிட்ட ஒரு தரப்பின் நலன்களை மட்டுமே வலியுறுத்துகின்ற எவரும், சரி எது, பிழை எது என்றோ, நியாயம் எது, அநியாயம் எது என்றோ, சிந்திக்க விரும்பாதவர்களாவர்.

எந்தப் பிரச்சினையிலும், மற்றவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, நாமே தீர்ப்பு வழங்குவது எளிது. ஆனால், நமது முடிவுகள், மற்றவர்களுக்கு ஏற்புடையனவாக இருக்கும் வாய்ப்பு அரிது.

இன்று, நாடு பல நெருக்கடிகளை ஒருங்கே எதிர்கொள்கிறது. இவற்றைத் தீர்ப்பதற்கோ, இவை குறித்து, திறந்த மனதுடன் பேசுவதற்கோ, எந்தவொரு தேசியவாதமும் தயாராக இல்லை. நெருக்கடிகளுக்கான பதில், எந்தத் தேசியவாதத்திடமும் இல்லை.

ஒன்றுக்கு ஒன்று, எதிரெதிர்த் திசையில் செயற்படுவதன் மூலம், தேசியவாதங்கள் தம்மைத் தக்கவைக்கின்றன. இதன் மூலம், அடிப்படைப் பிரச்சினைகளை மடைமாற்றுவதில் வெற்றியடைகின்றன.

இலங்கை மிகப்பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது. இதற்குக் குறுகிய காலத்தில், தீர்வு காணவியலாது. நீண்ட காலத்தில் தீர்வுகாண்பதற்கான திட்டங்கள், அரசாங்கத்திடமோ, தெரிவாகவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடமோ இருப்பதாகத் தெரியவில்லை. இந்த அவலநிலையை, தேர்தல் பிரசாரங்கள் வெளிக்காட்டின.

2013ஆம் ஆண்டுமுதல், பொருளாதாரக் குறிகாட்டிகள், மோசமான சரிவைச் சந்தித்து வருகின்றன. அதைத் தொடர்ந்து, இரண்டு ஆட்சி மாற்றங்களை, நாடு கண்டுவிட்டது. எதிர்த்தரப்பின் மீது, பழிபோட்டுத் தப்பித்துக் கொள்வதையே, ஆட்சியாளர்கள் வழமையாக வைத்திருக்கிறார்கள்.

கடந்த மாத முற்பகுதியில், உயர், நடுத்தர வருமானம் உள்ள நாடுகளின் பட்டியலில் இருந்த இலங்கையை, குறைந்த, நடுத்தர வருமானம் உள்ள நாடுகளின் பட்டியலுக்கு, உலக வங்கி தரமிறக்கியது. இது, இலங்கைப் பொருளாதாரத்தின் மோசமான நிலையை எடுத்துக் காட்டும் ஒரு குறிகாட்டியாகும்.

அடுத்த ஒருவருடத்துக்குள், இலங்கை திருப்பிச் செலுத்தவேண்டிய அந்நியக் கடன், ஏழு பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகம். இதைச் செலுத்துவதற்கான பொருளாதார வலிமை, இலங்கையிடம் இல்லை. எனவே, வேறு வழிகளில் கடன் பெற்றே, கடனைச் செலுத்த வேண்டிய நிலைக்கு, இலங்கை தள்ளப்பட்டுள்ளது. இதையே, இலங்கை பல ஆண்டுகளாகச் செய்து வருகிறது. இது, இலங்கையை மேலும் கடனாளியாக்குகிறது.

நாட்டின் வரவுக்கும் செலவுக்கும் இடையிலான வேறுபாடு, அதிகரித்த வண்ணம் இருக்கிறது. அதேவேளை, பணவீக்கம் தொடர்ச்சியாக அதிகரிக்கிறது. தொடர்ச்சியாக அதிகரிக்கும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த, திறைசேரி இருப்பில் உள்ள அமெரிக்க டொலர்களைப் புழக்கத்துக்கு விடுவதன் மூலம், அரசாங்கம், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி வருகிறது. இது தொடர்ச்சியாகச் செய்யக்கூடிய ஒன்றல்ல.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் நிலையை நன்குணர்ந்தே, அரசாங்கம் அவசர அவசரமாகத் தேர்தல்களை நடத்தி முடித்துள்ளது. புதிய நாடாளுமன்றமோ, உருவாகவுள்ள புதிய அரசாங்கமோ, இந்த நெருக்கடியில் இருந்து மக்களைக் காக்கும் வல்லமை அற்றது என்பதை, தேர்தல் பிரசாரங்களும் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களும் தெளிவாக்கியுள்ளன.

இப்போதும் சவால்களையும் நெருக்கடிகளையும் சந்திக்கப்போவது, சாதாரண உழைக்கும் மக்களும் அடித்தட்டு, நடுத்தரத் தட்டு வர்க்கத்தினருமே ஆவார்கள்.

கொவிட்-19 பெருந்தொற்றை, நாடு வெற்றிகொண்டு விட்டதுபோல் தோற்றம் காட்டினாலும், மருத்துவத்துறையினரும் பொதுச்சுகாதார அலுவலர்களும் தொடர்ந்தும் அச்சம் வெளியிட்ட வண்ணமே உள்ளனர்.

ஏற்கெனவே, மோசமான நிலையில் இருந்த நாட்டின் பொருளாதாரத்தை, கொவிட்-19 பெருந்தொற்று மேலும் மோசமாக்கியுள்ளது. இந்த நோய்த்தொற்றுக் காலத்தில், பலர் தொழில்களை இழந்துள்ளனர். பலருக்கு பணிக்குறைப்பும் சம்பளக் குறைப்பும் நடந்தேறியுள்ளன.

கொவிட்-19 தொற்றுக்காக, இன்னொரு முழு அடைப்புக்கு, இலங்கை தயாராக இல்லை. ஆனால், இதைக் கையாள்வதில் தொடர்புடைய தரப்பினருக்கு இடையிலான முறுகல் நிலை, நல்ல சமிக்ஞை அல்ல என்பதையும் இங்கு கோடிட்டுக்காட்ட வேண்டும்.

இன்னொருபுறம், கல்வித்துறை பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்குகிறது. ஒருபுறம் கொவிட்-19 தொற்றின் விளைவால், நிகர்நிலை கற்றல் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டாலும், அதன் பலன்கள் கேள்விக்கு உரியனவாகவே இருக்கின்றன.

2018ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி, ஐந்து வயது தொடக்கம் 18 வயது வரையானவர்கள் வாழ்கின்ற வீடுகளில், 40 சதவீதமான வீடுகளிலேயே இணைய வசதி இருக்கிறது.

பல்கலைக்கழகங்களின் இணையக் கல்வி நடவடிக்கைகளில், மாணவர்கள் சிரமத்துடன் பங்குகொள்வதாக விரிவுரையாளர்கள் தெரிவிக்கிறார்கள். இந்தப் புதியமுறை கற்பித்தல் செயற்பாடுகள், 'மரத்தில் இருந்து விழுந்தவனை, மாடேறி மிதித்த கதை'யாய், பொருளாதார வலுக்குறைந்த மாணவர்களை, மேலும் ஒதுக்குகின்றது. இவை குறித்து, நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

கல்வித்துறை போன்றே மருத்துவத்துறையும் பாரிய சிக்கல்களைக் கொண்டுள்ளது. நீண்ட போராட்டங்களின் ஊடு, இலங்கை தக்கவைத்த இலவச மருத்துவமும் இலவசக் கல்வியும் கேள்விக்குறி ஆகியுள்ளன. இதைத் தொடர்ந்தும் தக்கவைப்பதற்கான போராட்டம், இப்போதைய சூழலில் தவிர்க்க முடியாததாயுள்ளது.

வினைதிறனான சேவை, உயர்தரமான கல்வி என்ற போர்வைகளில் மருத்துவமும் கல்வியும் தனியார் மயமாக்கப்படும் அபாயத்தை, நாம் எதிர்நோக்கி இருக்கிறோம்.

இதேவேளை, சிறுபான்மையினரின் இருப்பே, ஆப்பு வைக்கும் நிகழ்ச்சிநிரல், பலதளங்களில் அரங்கேறுகிறது. அதைத் தடுத்து நிறுத்தும் வல்லமையோ, போராடும் திறனோ சிறுபான்மை நாடாளுமன்றக் கட்சிகளிடம் இல்லை.

சிறுபான்மைத் தேசிய இனங்களின் இன்றைய அரசியல் அவலம், அவர்களிடையே ஒரு மாற்று அரசியல் எழாததன் விளைவு எனலாம்.

மக்களிடையே பல விடயங்களைப் பற்றிய கொதிப்பு உள்ளது. ஆனால், ஒவ்வொரு நிகழ்வையும் தனித்தனியாகக் காண்பதும் அனைத்துக்கும் பொதுவாக உள்ள விடயங்களை அறிவதும், அந்த அடிப்படையில் மக்களைத் திரட்டுவதும் இப்போதுள்ள எந்தவொரு பிரதான சிறுபான்மை அரசியல் கட்சிக்கும் இயலாதது.

ஏனைய எந்தத் தேசிய இனத்தினதும் பிரச்சினை, நமது பிரச்சினையல்ல என்ற அலட்சியம் போக, மற்றைய சமூகத்தினர் எவரையும், நம்ப இயலாது என்ற சிந்தனைப் போக்கும், தமிழரிடையே வலிந்து தூண்டப்படுகின்றது.

பிறசமூகங்களின் தலைமைகளின் குற்றங்களை நம்மிடையே பேசுகிற அதேவேளை, அக்குற்றங்களுக்கு நமது தலைமைகள் அளித்துள்ள பங்கையும் நாம் யோசிக்க வேண்டும்.

நம்மிடையே, பிறரின் துன்பங்களைப் பற்றி அக்கறைப்படுவது குறைவு. தமிழ்த் தேசியவாத அரசியலில், அது அறவே இல்லை எனலாம்.

மக்கள் அனைவரையும் பாதிக்கின்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசி, அவற்றின் அடிப்படையில் இன, மத, மொழி எல்லைகளைத் தாண்டிய ஒரு பொது உரையாடலை, இவர்கள் ஏன் தவிர்க்கிறார்கள் என்பது சிந்தனைக்குரியது.

அதற்கான பதிலின் ஒரு பகுதியை, சம்பூரில் விவசாய நிலங்களை இழந்த தமிழரையும் வடபுலத்தில் மீன் வளத்தை அந்நியக் கொள்ளையரிடம் பறிகொடுக்கும் மீனவர்களையும் புத்தளத்தில் குப்பைகள் கொட்டுவதால் பாதிப்பை எதிர்நோக்கும் மக்களையும் பற்றிய, வஞ்சகமான நடத்தையில் காணலாம்.

தங்களுடைய சுயலாபத்துக்காகத் தேர்தல் கண்ணோட்டத்தில் செயற்படுவோர், மக்கள் தமது பிரச்சினைகளைப் பன்முகமாக நோக்குவதை விரும்பமாட்டார்கள். அந்தச் சிந்தனைச் சிறையிலிருந்து விடுபடாதவரை, ஒவ்வொரு சமூகமும் தன்னைத் தனிமைப்படுத்திப் பலவீனமடையும்.

தேர்தலில் வென்றவர்களும் தோற்றவர்களும் திருவிழா முடிந்த களைப்பில் இருப்பார்கள். எங்கள் நிலங்களும் தொழிலும் வருமானமும் கல்வியும் மருத்துவமும் பறிபோகும் காலமதில், அடுத்த வேளைச் சோற்றுக்கு வழி என்ன என்பது பற்றி, சிந்திக்கத் தொடங்குவோம்.

## கடிதங்கள்

### வெள்ளத்தால் பயிர்கள் அழிவு

அம்பாறை மாவட்டம், கல்முனை விவசாயப் போதனாசிரியர் பிரிவுக்கு உட்பட்ட, வயல்நிலங்களில் பயிரிடப்பட்ட நெற்பயிர்ச் செய்கைகள் அழிவடைந்துள்ளதால், விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி உள்ளனர்.

தாம்போதி ஆற்றில் ஏற்பட்ட நீர்ப் பெருக்கால், வயல்களின் கிட்டங்கியில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டதால், அறுவடைக்குத் தயாராக இருந்த வேளாண்மைகள் அழிவடைந்துள்ளன.

அண்மையில் பெய்த மழையால், தாம்போதி ஆற்றில், நீர்வரத்து அதிகரித்து, வயல்களின் கிட்டங்கியில் நீர் தேங்கியதால், வேளாண்மைகள் அழிவடைந்துள்ளன. எந்தவிதத்திலும் பயன்படுத்த முடியாத அளவுக்கு, இந்த வேளாண்மைகள் அழிவடைந்துள்ளமையால், விவசாயிகள் அவற்றைக் கைவிட வேண்டிய நிலைக்கு வந்துள்ளனர்.

வங்கிகளிலும், நிதிநிறுவனங்களிலும் கடன்களைப் பெற்றும், சிலர் தமது நகைகளை அடகு வைத்தும் பெற்ற பணத்தைக் கொண்டு, வேளாண்மைச் செய்கையை ஆரம்பித்திருந்த விவசாயிகள், இப்போது எந்தவிதமான வருவாயும் இன்றி, பெரும் நட்டத்துக்கு உள்ளாகி உள்ளனர்.

குறிப்பிட்ட பிரிவில் உள்ள விவசாயிகள் எல்லோருக்கும் இந்த அழிவு பொதுவானதாகும். எனவே, அரசாங்கம் எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றி, பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நட்டயீடு வழங்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

–டபிள்யு. எம். சர்வானந்தன்

# இன்றும் மழை பெய்யும் சாத்தியம்

சப்ரகமுவ, மேல், மத்தி, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில், இன்றும் (07) இடைக்கிடையே மழை பெய்யுமென, வானிலை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணம், காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களின் சில இடங்களிலும், 50 மில்லிமீற்றருக்கும் அதிகமாக மழை பெய்யும் என்று, திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்தி, வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டம், மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவுகளிலும் மணித்தியாலத்துக்கு 50 மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என, வானிலை மத்திய நிலையம் தெரவித்துள்ளது.

**மணித்தியாலத்துக்கு 50 மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என, வானிலை மத்திய நிலையம் தெரவித்துள்ளது**

அத்துடன், பேருவளையிலிருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற் பிரதேசங்களில், கடல் அலையின் தாக்கம் அதிகரித்திருக்கும் அதேவேளை, கரையை நோக்கி அலை வருவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதென்றும், வானிலை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(படப்பிடிப்பு: கித்சிறி டீ மெல்)



## களுத்துறையில் 200 வீடுகள் சேதம்

என் ஜெயரட்னம்

களுத்துறை மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில், நேற்று (06) அதிகாலை முதல் பெய்துவரும் கடும் மழையுடன் வீசிய பலத்த காற்று காரணமாக, சுமார் 200 வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதென, அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் களுத்துறை மாவட்டப் பொறுப்பதிகாரி பணிப்பாளர் கேர்ணல் சுஜித் குலசேகர தெரிவித்தார்.

இதனடிப்படையில், களுத்துறை மாவட்டத்தில் 6 வீடுகள் முற்றாகச் சேதமடைந்ததுடன், 187 வீடுகள் பகுதியளவிலும் 4 வீடுகள் சிறியளவிலும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

மேலும், பிரதான மற்றும் குறுக்கு வீதிகள் பலவற்றிலும் மரங்கள் சரிந்தும் கிளைகள் முறிந்தும் வீழ்ந்ததன் காரணமாக, மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகளும் துண்டிக்கப்பட்டதுடன், வீதிப் போக்குவரத்துக்கும் இடையூறுகள் ஏற்பட்டதாக, சுஜித் குலசேகர தெரிவித்தார்.

**பிரதான மற்றும் குறுக்கு வீதிகள் பலவற்றிலும் மரங்கள் சரிந்தும் கிளைகள் முறிந்தும் வீழ்ந்ததன் காரணமாக, மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகளும் துண்டிக்கப்பட்டதுடன், வீதிப் போக்குவரத்துக்கும் இடையூறுகள் ஏற்பட்டதாக, சுஜித் குலசேகர தெரிவித்தார்**

வீதிகளில் மரங்கள் சரிந்து வீழ்ந்து, போக்குவரத்து தடைபட்டமையாலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டதன் காரணமாகவும், அன்றாடம் அதிகாலையிலேயே தூர இடங்களுக்குத் தொழிலுக்காகச் செல்வோரும், மழை காரணமாக இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களும், நேற்றைய தினம் தொழிலுக்குச் செல்ல வழியின்றி சிரமத்துக்கு உள்ளானார்கள்.



சுயேட்சை குழு

## வேட்பாளர் மீது சரமாரித் தாக்குதல்

ஹஸ்பர் ஏ ஹலீம்

கிண்ணியா - குட்டித்தீவு பகுதியில் வைத்து, சுயேச்சைக் குழு வேட்பாளர் ஒருவர் மீது, நேற்று முன்தினம் (05) மாலை சரமாரியாகத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியாவைச் சேர்ந்த "கார்கோ நிஸார்" என்று அழைக்கப்படும் ஜமால்தீன் முஹம்மட் நிஸார் என்பவரே, இனந்தெரியாத நபர்களால், இரும்புக் கம்பியால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளாரென, பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளன.

தாக்குதலுக்கு உள்ளானவர், கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிய கும்பல் தொடர்பான தகவல்கள், சிசிடிவி கமெராவில் பதிவாகியுள்ளன எனத் தெரிவித்த கிண்ணியா பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## காற்றில் அள்ளுண்ட கூரைகள் அள்ளுண்டன

காஞ்சனகுமார ஆரியதாஸ



நேற்று முன்தினம் (06) அதிகாலை, காலி பிரசேத்தை ஊடறுத்து வீசிய கடும் காற்றினால், 11 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், வீடொன்றின் கூரையிலிருந்த 12 தகரங்கள், காற்றில் அள்ளுண்டுச் சென்ற நிலையில், 150 - 200 மீற்றர் தூரத்தில் இருந்து கண்டுபிடிக்க ப்பட்டுள்ளன.

இதற்கமைய, கலேவல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதஹா, யட்டிகல்பொத்த, பஹலவெவ, கெந்தன்கமுவ, அளுத்வெவ உள்ளிட்ட பல பிரதேசங்களிலுள்ள வீடுகளும் சேதமடைந்துள்ளன.

கலேவல பிரதேசத்தில் இடம்பெற்ற இவ்வனர்த்தம் தொடர்பான கணக்கெடுப்பை, அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், கலேவல பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.



வாக்களிக்க மலையகம் சென்றோர்

## கொழும்பு திரும்ப பஸ் பற்றாக்குறை

சுதத் எச்.எம்.ஹேவா

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பில் கலந்துகொள்வதற்காக, கொழும்பிலிருந்து மலையகத்துக்குச் சென்றவர்கள், மீண்டும் கொழும்பு நோக்கி வருவதற்கு, போதிய பஸ் வசதிகள் இன்றி பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறு கொழும்பு நோக்கிப் புறப்படுவதற்காக வருகை தந்தவர்கள், காலையிலிருந்து பல மணிநேரம் ஹட்டன் பஸ் நிலையத்தில் காத்திருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில், ஹட்டன் பஸ் டிப்போவின் அதிகாரியொருவரிடம் வினவியபோது, மழையுடனான வானிலையால், ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியின் பல இடங்களிலும் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டுள்ளதால், கொழும்பிலிருந்து வந்த பல பஸ்கள், இடையில் நிற்பதாகவும் தெரிவித்தார்.

எனினும், ஹட்டன் டிப்போவிலிருந்து குறுகிய தூர சேவையில் ஈடுபடும் பஸ் சேவைகள், உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## 1,937 பேருக்கு தொடர் தனிமைப்படுத்தல்

இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் 33 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில், தொடர்ந்தும் 1,937 பேர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

இவர்களில் 880 பேருக்கு, பிசிஆர் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளதுடன், இதுவரை 166,737 பிசிஆர் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்று (06) காலை 6 மணி வரையான காலப்பகுதிக்குள், 5 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளானமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில், அலுவலக சபையின் உறுப்பினர் ஒருவர், சேனபுர புனர்வாழ்வு மத்திய நிலையத்திலிருந்த கைதியொருவர், ஏனைய மூவரும் வெளிநாடுகளிலிருந்து வந்த இலங்கையர்கள் என்றும் கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மய்யம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று (6) காலை வரை 29,508 பேர் தனிமைப்படுத்த லை நிறைவு செய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனரென, கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மய்யம் தெரிவித்துள்ளது.

## மீனவர் வாடிகள் காற்றில் சேதம்



ஹிரான் பிரியங்கர

புத்தளம் மாவட்டத்தின் பல இடங்களில் வீசிய கடுங்காற்றினால், 74 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், மீனவர் வாடிகள் பலவும் சேதமடைந்துள்ளனவென, புத்தளம் மாவட்டச் செயலாளர் சந்திரசிறி பண்டார தெரிவித்துள்ளார்.

வனாத்தவில்லு, முந்தல், கருவலகஸ்வெவ, பள்ளம, நாத்தாண்டியா உள்ளிட்ட பல பிரதேசச் செயலாளர் பிரிவுகளிலும் உள்ள வீடுகளும் சேதமடைந்துள்ளன என்றும் அவர் கூறினார்.

## மலையகமெங்கும் சீரற்ற வானிலை தொடர்கிறது

இரா.யோகேசன்

மலையகத்தில் தொடர்ந்தும் சீரற்ற வானிலை நிலவுகின்றது. தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை மற்றும் அதிக காற்று காரணமாக, பொதுமக்கள் பல வழிகளிலும் சிரமத்தைச் சந்தித்து வருகின்றனர். இடையிடையே மூடு பனியும் சூழ்ந்து காணப்படுகின்றது.

தொடர்ந்து மூன்று வாரங்களுக்கு அதிகமாகப் பெய்துவரும் அடை மழை,



தொடர்கிறது. இதனால், வானிலையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், தொடர்ச்சியாகக் குளிரான வானிலை நிலவுகின்றது. இதனால், வயோதிபர்கள், நோயாளர்கள், சிறுவர்கள் போன்றோர் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு (05), கடும் காற்றும் மழையும் பெய்த காரணத்தால், மலையகத்தின் முக்கிய நகரங்களான ஹட்டன், வட்டவலை, கினிகத்தேனை போன்ற இடங்களில், இரவு முழுவதும் மின்சாரம் தடைப்பட்டது. இதனால், பொதுமக்கள் பல்வேறு வகைகளிலும் சிரமத்துக்கு உள்ளாகியிருந்தனர்.

(படம்: சுதத் எச்.எம். ஹேவா)

## மொட்டு வேட்பாளரின் வாகனம் மீது தாக்குதல்

ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி மாவட்டப் பொதுஜன பெரமுன கட்சி வேட்பாளர் காமினி வலேபொடவின் ஜீப் வண்டி மீது, இனந்தெரியாத நபர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதல், இரத்தினபுரி - இறக்குவானை பிரதேசத்தில், பொதுத் தேர்தல் தினமான நேற்று முன்தினம் (05) நடத்தப்பட்டதாக, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால், வேட்பாளர் காமினி வலேபொடவின் ஆதரவாளர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**வேட்பாளர் காமினி வலேபொட, ஜனாதிபதியின் வியத்மக அமைப்பின் செயற்பாட்டு உறுப்பினரும் பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவருமாவார்**

வேட்பாளர் காமினி வலேபொட, ஜனாதிபதியின் வியத்மக அமைப்பின் செயற்பாட்டு உறுப்பினரும் பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவருமாவார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னேஸ்வரம் கொடியேற்றம்

ஜூட் சமந்த



சிலாபத்தில் அமைந்துள்ள முன்னேஸ்வரம் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன் கோவிலின் வருடாந்த மகோற்சவம், நேற்று முன்தினம் (05), கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இந்த மகோற்சவப் பெருவிழா, செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரவுள்ளது.

அந்த வகையில், இம்மாதம் 27ஆம் திகதியன்று தீமிதிப்பும் செப்டம்பர் முதலாம் திகதி தெதுருஓயாவில் நீர்வெட்டும் நடைபெறவுள்ளன.

வருடாந்த மகோற்சவத்தில் கலந்துகொள்பவர்கள், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றிக் கலந்துகொள்ளுமாறு, கோவிலின் பிரதம குருக்கள் எஸ். பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

## மேல் கொத்மலை நீர்த்தேக்க வான் கதவொன்று திறப்பு

சுஜிதா

நுவரெலியா மாவட்டத்தில், கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக, மாவட்டத்தில் வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாவட்டத்திலுள்ள நீரோடைகளின் நீர் மட்டமானது, வெகுவாக அதிகரித்த நிலையில், மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டமும் வான் மட்டம் வரை உயர்ந்துள்ளது.

இதனால், குறித்த நீர்த்தேக்கத்தின் ஒரு வான் கதவு திறக்கப்பட்டுள்ளது.

எனவே, தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்கள், எந்நேரத்திலும் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு, மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

மேலும், தலவாக்கலை நகரைச் சூழவுள்ள ஓரிரு தோட்டங்களில், மரக்கிளைகள் முறிந்து விழுந்த சந்தர்ப்பங்களும் பதிவாகியுள்ளன. இருந்தபோதிலும், இதனால் எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.



# தேர்தல் முடிவுகள்

பொதுத்தேர்தல் 2020

## யாழ்ப்பாணம்

### தேர்தல் தொகுதிகள்

#### யாழ்ப்பாணம்

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| இ.த.அ.க | 7,634 | 33.00 |
| ஈ.பி.டி.பி | 5,545 | 23.97 |
| அ.இ.த.கா | 4,642 | 20.06 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 23,136 | 68.28 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2.029 | 5.99 |
| மொத்த வாக்குகள் | 25,165 | 74.26 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 33,886 | |

#### ஊர்காவற்றுறை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஈ.பி.டி.பி | 6,369 | 41.60 |
| இ.த.அ.க | 4,412 | 28.82 |
| அ.இ.த.கா | 1,376 | 8.99 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 15,311 | 67.12 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,632 | 7.15 |
| மொத்த வாக்குகள் | 16,943 | 74.28 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 22,811 | |

#### கோப்பாய்

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| இ.த.அ.க | 9,365 | 26.62 |
| ஸ்ரீ.ல.சு.க | 7,188 | 20.43 |
| அ.இ.த.கா | 5,672 | 16.12 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 35,179 | 59.71 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,770 | 6.40 |
| மொத்த வாக்குகள் | 38,949 | 66.11 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 58,917 | |

#### காங்கேசன்துறை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| இ.த.அ.க | 6,849 | 25.15 |
| ஸ்ரீ.ல.சு.க | 5,560 | 20.42 |
| அ.இ.த.கா | 4,645 | 17.06 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 27,232 | 44.12 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,674 | 4.33 |
| மொத்த வாக்குகள் | 29,906 | 48.45 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 61,727 | |

#### நல்லூர்

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| இ.த.அ.க | 8,423 | 27.23 |
| அ.இ.த.கா | 8,386 | 27.11 |
| ஈ.பி.டி.பி | 3,988 | 12.89 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 30,934 | 65.15 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,512 | 5.29 |
| மொத்த வாக்குகள் | 33,448 | 70.45 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 47,478 | |

#### சாவகச்சேரி

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| இ.த.அ.க | 8,931 | 28.23 |
| த.ம.தே.கூ | 5,847 | 18.48 |
| ஸ்ரீ.ல.சு.க | 5,277 | 16.68 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 31,640 | 60.02 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,345 | 6.35 |
| மொத்த வாக்குகள் | 34,985 | 66.37 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 52,713 | |

#### பருத்தித்துறை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| இ.த.அ.க | 5,883 | 24.58 |
| ஸ்ரீ.ல.சு.க | 4,700 | 19.91 |
| அ.இ.த.கா | 4,158 | 17.61 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 23,607 | 63.62 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,237 | 6.03 |
| மொத்த வாக்குகள் | 25,844 | 69.65 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 37,105 | |

#### வட்டுக்கோட்டை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| இ.த.அ.க | 9,024 | 29.22 |
| அ.இ.த.கா | 5,610 | 18.16 |
| ஸ்ரீ.ல.சு.க | 4,556 | 14.75 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 30,888 | 36.54 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,308 | 6.81 |
| மொத்த வாக்குகள் | 34,196 | 70.35 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 48,611 | |

## அநுராதபுரம்

#### அநுராதபுரம் மேற்கு

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 52,075 | 69.72 |
| ஐ.ம.ச | 17,128 | 22.93 |
| தே.ம.ச | 3,074 | 4.12 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 74,692 | 72.21 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 5,323 | 5.15 |
| மொத்த வாக்குகள் | 80,015 | 77.35 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 103,439 | |

#### மதவாச்சி

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 40,800 | 67.83 |
| ஐ.ம.ச | 15,011 | 24.96 |
| தே.ம.ச | 2,529 | 4.20 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 68,152 | 72.60 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,669 | 5.64 |
| மொத்த வாக்குகள் | 64,821 | 78.24 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 82,851 | |

#### ஹொரவபொத்தானை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 35,511 | 61.70 |
| ஐ.ம.ச | 17,665 | 30.69 |
| தே.ம.ச | 2,229 | 3.87 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 57,558 | 72.28 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,838 | 6.07 |
| மொத்த வாக்குகள் | 62,388 | 78.35 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 79,631 | |

#### கெக்கிராவ

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 38,871 | 65.37 |
| ஐ.ம.ச | 16,666 | 28.03 |
| தே.ம.ச | 1,929 | 3.24 |
| செல்லுபடியாகும் வாக்குகள | 59,466 | 71.88 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள | 3,995 | 4.78 |
| மொத்த வாக்குகள் | 63,461 | 75.85 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 89,663 | |

## பதுளை

### தேர்தல் தொகுதிகள்

#### ஊவா பரணகம

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 29,713 | 64.05 |
| தே.ம.ச | 12,717 | 27,14 |
| ஐ.ம.ச | 1,431 | 3.08 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 46,389 | 74.71 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,427 | 5.52 |
| மொத்த வாக்குகள் | 49,816 | 80.23 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 52,089 | |

#### மஹியங்கனை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 45,297 | 62.14 |
| ஐ.ம.ச | 19.624 | 26.92 |
| தே.ம.ச | 3,384 | 4.64 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 72,896 | 74.08 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,802 | 4.88 |
| மொத்த வாக்குகள் | 77,698 | 78.96 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 98,398 | |

#### பசறை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 25,854 | 56.65 |
| ஐ.ம.ச | 16,654 | 36.49 |
| தே.ம.ச | 750 | 1.64 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 45,638 | 71.49 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,971 | 7.79 |
| மொத்த வாக்குகள் | 50,509 | 79.28 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 63,839 | |

#### வெலிமடை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 33,532 | 60.19 |
| ஐ.ம.ச | 18,536 | 33.27 |
| தே.ம.ச | 1,962 | 3.52 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 55,714 | 73.71 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,022 | 5.32 |
| மொத்த வாக்குகள் | 59,736 | 79.03 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 75,589 | |

#### வியலுவ

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 24,892 | 67.69 |
| ஐ.ம.ச | 9,425 | 25.63 |
| தே.ம.ச | 1,018 | 2.77 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 36,772 | 71.81 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,329 | 6.50 |
| மொத்த வாக்குகள் | 40,101 | 78.32 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 51,204 | |

#### பதுளை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 24,943 | 62.97 |
| ஐ.ம.ச | 10,454 | 26.39 |
| தே.ம.ச | 1,956 | 4.94 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 39,610 | 73.76 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,495 | 4.65 |
| மொத்த வாக்குகள் | 42,105 | 76.41 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 53,698 | |

#### ஹாலி–எல

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 31,039 | 60.13 |
| ஐ.ம.ச | 15,447 | 29.92 |
| தே.ம.ச | 1,688 | 3.27 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 51,621 | 73.54 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,536 | 6.46 |
| மொத்த வாக்குகள் | 56,157 | 80.00 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 70,173 | |

#### பண்டாரவளை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 38,673 | 61.95 |
| ஐ.ம.ச | 17,795 | 28.51 |
| தே.ம.ச | 2,863 | 4.59 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 62,413 | 74.80 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,582 | 5.43 |
| மொத்த வாக்குகள் | 66,995 | 79.43 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 84,346 | |

#### ஹப்புத்தளை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 27,367 | 57.00 |
| ஐ.ம.ச | 17,027 | 35.46 |
| தே.ம.ச | 1.235 | 2.57 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 48,812 | 72.81 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,321 | 6.55 |
| மொத்த வாக்குகள் | 52,333 | 79.37 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 65,939 | |

## காலி

மாவட்ட இறுதி முடிவுகள்

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 430,334 | 70.54 |
| ஐ.ம.ச | 115,456 | 18.93 |
| தே.ம.ச | 29,963 | 4.91 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 610,052 | 70.31 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 35,751 | 4.12 |
| மொத்த வாக்குகள் | 645,803 | 74.43 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 867,789 | |

#### Galle District Postal Votes

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 27,682 | 72.70 |
| ஐ.ம.ச | 5,144 | 13.51 |
| தே.ம.ச | 3,135 | 8.23 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 38,076 | 53.39 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,674 | 4.11 |
| மொத்த வாக்குகள் | 39,750 | 97.50 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 48,770 | |

### தேர்தல் தொகுதிகள்

#### பலபிட்டிய

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 25,850 | 73.05 |
| ஐ.ம.ச | 6,105 | 17.25 |
| தே.ம.ச | 1,235 | 3.49 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 35,389 | 66.71 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,212 | 4.17 |
| மொத்த வாக்குகள் | 37,601 | 70.88 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 53,047 | |

#### அம்பலாங்கொட

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 39,142 | 74.73 |
| ஐ.ம.ச | 8,202 | 15.66 |
| தே.ம.ச | 2,321 | 4.43 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 52,375 | 68.78 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,115 | 4.09 |
| மொத்த வாக்குகள் | 55,498 | 72.87 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 76,150 | |

#### காலி

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 27,535 | 49.11 |
| ஐ.ம.ச | 18,706 | 33.36 |
| தே.ம.ச | 4,380 | 7.81 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 56,067 | 69.58 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,602 | 3.23 |
| மொத்த வாக்குகள் | 58,669 | 72.81 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 80,580 | |

#### ஹபராதுவ

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 42,497 | 75.91 |
| ஐ.ம.ச | 8,625 | 15.41 |
| தே.ம.ச | 2,349 | 4.20 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 55,981 | 68.25 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 9,351 | 4.09 |
| மொத்த வாக்குகள் | 59,332 | 72,34 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 82,019 | |

#### ரத்கம

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 38,904 | 74.14 |
| ஐ.ம.ச | 8,596 | 16.38 |
| தே.ம.ச | 1,993 | 3.80 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 52,477 | 67.72 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,379 | 4.36 |
| மொத்த வாக்குகள் | 55,856 | 72.08 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 77,494 | |

#### அக்மீமன

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 46,093 | 69.47 |
| ஐ.ம.ச | 12,266 | 18.49 |
| தே.ம.ச | 4,550 | 6.86 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 66,347 | 66.47 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,561 | 3.68 |
| மொத்த வாக்குகள் | 69,908 | 72.15 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 96,897 | |

#### பெந்தரை – எல்பிட்டிய

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 45,117 | 73.24 |
| ஐ.ம.ச | 10,464 | 16.99 |
| தே.ம.ச | 2,753 | 4.47 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 61,605 | 69.08 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,739 | 4.19 |
| மொத்த வாக்குகள் | 65,344 | 73.28 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 89,173 | |

#### கரந்தெனிய

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 39,857 | 76.61 |
| ஐ.ம.ச | 7,511 | 14.44 |
| தே.ம.ச | 1,881 | 3.62 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 52,028 | 69.77 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,898 | 3.89 |
| மொத்த வாக்குகள் | 54,927 | 73.66 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 74,570 | |

#### கினிதும

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 50,395 | 68.91 |
| ஐ.ம.ச | 16,587 | 22.28 |
| தே.ம.ச | 2,524 | 3.45 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 73,128 | 72.75 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,497 | 4.47 |
| மொத்த வாக்குகள் | 77,625 | 77.22 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 100,525 | |

#### பத்தேகம

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 47,262 | 70.99 |
| ஐ.ம.ச | 13,247 | 19.90 |
| தே.ம.ச | 2,842 | 4.27 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 56,579 | 69.01 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,722 | 4.89 |
| மொத்த வாக்குகள் | 71,301 | 73.90 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 96,484 | |

## மாத்தறை

மாவட்ட இறுதி முடிவுகள்

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 352,217 | 73.63 |
| தே.ம.ச | 72,740 | 15.21 |
| ஐ.ம.ச | 37,136 | 7.76 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 478,379 | 72.53 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 22,578 | 3.42 |
| மொத்த வாக்குகள் | 500,957 | 75.95 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 659,587 | |

#### Colombo District Postal Votes

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 20,275 | 74.30 |
| தே.ம.ச | 3,149 | 11.54 |
| ஐ.ம.ச | 3,878 | 11.28 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 27,287 | 93.61 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,020 | 3.50 |
| மொத்த வாக்குகள் | 28,307 | 97.11 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 29,149 | |

### தேர்தல் தொகுதிகள்

#### தெனியாய

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 51,681 | 72.66 |
| ஐ.ம.ச | 11,619 | 16.34 |
| தே.ம.ச | 4,332 | 6.89 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 71,125 | 70.27 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 5,405 | 5.34 |
| மொத்த வாக்குகள் | 76,530 | 75.61 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 101,219 | |

#### ஹக்மன

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 52,245 | 78.84 |
| ஐ.ம.ச | 8,701 | 13.00 |
| தே.ம.ச | 3,777 | 5.64 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 66,946 | 72.42 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,434 | 3.71 |
| மொத்த வாக்குகள் | 70,380 | 76.14 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 92,439 | |

#### கம்புருபிட்டிய

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 45,783 | 78.17 |
| ஐ.ம.ச | 7,512 | 12.83 |
| தே.ம.ச | 3,749 | 6.40 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 58,565 | 73.22 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,512 | 3.14 |
| மொத்த வாக்குகள் | 61,877 | 76.37 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 79,980 | |

#### தெவிநுவர

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 48,143 | 73.02 |
| ஐ.ம.ச | 9,009 | 16.39 |
| தே.ம.ச | 4,196 | 7.63 |
| செல்லுபடியாகும் வாக்குகள | 54,977 | 69.97 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள | 2,188 | 2.78 |
| மொத்த வாக்குகள் | 57.165 | 72.75 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 78,573 | |

#### மாத்தறை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 43,260 | 68,18 |
| ஐ.ம.ச | 10,410 | 16.41 |
| தே.ம.ச | 7,730 | 12.18 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 63,449 | 71.99 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,096 | 2.35 |
| மொத்த வாக்குகள் | 65,518 | 74.34 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 88,130 | |

#### வெலிகம

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 47,663 | 76.99 |
| ஐ.ம.ச | 12,359 | 18.41 |
| தே.ம.ச | 4,668 | 6.95 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 67,145 | 70.09 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,861 | 2.99 |
| மொத்த வாக்குகள் | 70,006 | 73.08 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 95,792 | |

#### அக்குரஸ்ஸ

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 51,167 | 74,28 |
| ஐ.ம.ச | 10,052 | 14.59 |
| தே.ம.ச | 5,535 | 8.04 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 68,885 | 73.04 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,089 | 3.28 |
| மொத்த வாக்குகள் | 71,974 | 76.32 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 94,304 | |

## வன்னி

### தேர்தல் தொகுதிகள்

#### முல்லைத்தீவு

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| இ.த.அ.க | 22,492 | 44.16 |
| ஸ்ரீ.ல.பொ.பெ | 8,307 | 16.31 |
| ஐ.ம.ச | 6,087 | 11.95 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 50,934 | 68.36 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,246 | 8.38 |
| மொத்த வாக்குகள் | 57,180 | 76.74 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 74,510 | |

## மொனராகலை

### தேர்தல் தொகுதிகள்

#### வெள்ளவாய

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 91,593 | 77.02 |
| ஐ.ம.ச | 20,087 | 16.89 |
| தே.ம.ச | 4,679 | 3.93 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 118,915 | 75.83 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 7,905 | 5.04 |
| மொத்த வாக்குகள் | 126,820 | 80.87 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 156,828 | |

#### பிபிலை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 42,955 | 70.52 |
| ஐ.ம.ச | 13,458 | 22.09 |
| தே.ம.ச | 2,480 | 4.07 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 60,916 | 73.66 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,519 | 5.45 |
| மொத்த வாக்குகள் | 65,435 | 79.13 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 82,695 | |

#### மொனராகலை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 58,205 | 73.04 |
| ஐ.ம.ச | 16,753 | 21.02 |
| தே.ம.ச | 2,783 | 3.49 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 79,690 | 72.96 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,709 | 6.14 |
| மொத்த வாக்குகள் | 86,399 | 79.10 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 189,221 | |

## திருகோணமலை

#### Trincomalee District Postal Votes

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 6,767 | 47.61 |
| தே.ம.ச | 3,884 | 27.33 |
| ஐ.ம.ச | 2,337 | 16.44 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 14,214 | 93.51 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 594 | 3.91 |
| மொத்த வாக்குகள் | 14,808 | 97.42 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 15,200 | |

### தேர்தல் தொகுதிகள்

#### சேருவில

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 34,035 | 61.21 |
| ஐ.ம.ச | 13,113 | 23.59 |
| தே.ம.ச | 4,723 | 23.59 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 55,606 | 75.37 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,723 | 5.05 |
| மொத்த வாக்குகள் | 59,329 | 80.41 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 73,782 | |

#### திருகோணமலை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| இ.த.அ.க | 23,008 | 34.47 |
| ஐ.ம.ச | 18,063 | 27.06 |
| தே.ம.ச | 16,974 | 25.16 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 66,748 | 71.91 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,839 | 5.21 |
| மொத்த வாக்குகள் | 71,587 | 77.12 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 92,823 | |

## இரத்தினபுரி

#### Ratnapura District Postal Votes

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 21,921 | 74.39 |
| தே.ம.ச | 4,515 | 15.32 |
| ஐ.ம.ச | 1,792 | 6.08 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 29,466 | 93.13 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,145 | 3.62 |
| மொத்த வாக்குகள் | 30,611 | 96.75 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 31,638 | |

### தேர்தல் தொகுதிகள்

#### எகலியகொட

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 49,533 | 70.55 |
| ஐ.ம.ச | 15,471 | 22.04 |
| தே.ம.ச | 1,948 | 2.77 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 70,209 | 71.25 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,180 | 3.23 |
| மொத்த வாக்குகள் | 73,389 | 74.48 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 98,535 | |

## மட்டக்களப்பு

### தேர்தல் தொகுதிகள்

#### கல்குடா

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| த.ம.வி.பு | 20,622 | 24.54 |
| இ.த.அ.க | 17,312 | 20.50 |
| ஐ.ம.ச | 15,394 | 18.32 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 84,819 | 71.50 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 5,145 | 4.38 |
| மொத்த வாக்குகள் | 89,164 | 75.88 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 117,502 | |

## களுத்துறை

### தேர்தல் தொகுதிகள்

#### பாணந்துறை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 52,533 | 61.18 |
| ஐ.ம.ச | 21,416 | 24.94 |
| தே.ம.ச | 5,344 | 6.22 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 85,862 | 71.10 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 5,140 | 4.26 |
| மொத்த வாக்குகள் | 91,002 | 75.35 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 120,770 | |

#### களுத்துறை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 52,344 | 61.48 |
| ஐ.ம.ச | 18,582 | 21.82 |
| தே.ம.ச | 5,111 | 6.00 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 85,142 | 70.41 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 5,253 | 4.34 |
| மொத்த வாக்குகள் | 90,395 | 74.75 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 120,922 | |

## ஹம்பாந்தோட்டை

### தேர்தல் தொகுதிகள்

#### பெலியத்த

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 43,821 | 76.08 |
| ஐ.ம.ச | 7,012 | 12.17 |
| தே.ம.ச | 4,913 | 8.53 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 57,599 | 75.24 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,612 | 3.41 |
| மொத்த வாக்குகள் | 60,211 | 78.65 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 76,554 | |

#### திஸ்ஸமஹாராம

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 93,532 | 72.32 |
| ஐ.ம.ச | 22,920 | 17.70 |
| தே.ம.ச | 10,146 | 7.83 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 129,499 | 75.13 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,891 | 4.00 |
| மொத்த வாக்குகள் | 136,390 | 79.13 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 172,363 | |

## பொலன்னறுவை

### தேர்தல் தொகுதிகள்

#### மெதிரிகிரிய

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 40,864 | 71.05 |
| ஐ.ம.ச | 12,811 | 22.27 |
| தே.ம.ச | 1,605 | 2.79 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 57,515 | 73.67 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,418 | 4.38 |
| மொத்த வாக்குகள் | 60,399 | 78.05 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 78,074 | |

#### மின்னேரியா

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 46,632 | 77.07 |
| ஐ.ம.ச | 9,463 | 15.64 |
| தே.ம.ச | 1,948 | 3.22 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 60,507 | 72.02 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,035 | 4.80 |
| மொத்த வாக்குகள் | 64,542 | 76.82 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 84,019 | |

## கண்டி

### தேர்தல் தொகுதிகள்

#### கம்பளை

| கட்சிகள் | வாக்குகள் | % |
|---|---|---|
| ஸ்ரீ.ல.பொ.பெ | 41,759 | 54.72 |
| ஐ.ம.ச | 26,331 | 34.51 |
| சுயேச்சை குழு 1 | 2,101 | 2.75 |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 76,308 | 71.17 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,885 | 6.42 |
| மொத்த வாக்குகள் | 89,193 | 77.59 |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 107,217 | |

நேற்று (06) பிற்பகல் 1 மணி முதல் இரவு 7 மணி வரை வெளியான தேர்தல் பெறுபேறுகள் தொடர்பான விவரங்கள் மட்டுமே, இப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை, 7 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.